# திருமலைத்தீபம்
## Thirumalaitheepam

தீபம் – 84 புரட்டாதி– 2023 இல. 297, கடற்படைத்தள வீதி, திருகோணமாலை Email: theepamlink@gmail.com TP: 026 222 1022/ 026 205 4362 Rs. 60/=




## பத்திரிகை ஆசிரியரின் பேனா...

அன்னை மரியாளுக்கு சிறப்பு மாதங்கள் வைகாசி மற்றும் ஐப்பசி. இந்த மாதங்களில் கத்தோலிக்கர்களாகிய நாம் செபமாலைக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்போம். அன்னை மரியாளின் திருச்சுரூபத்தை வீடுவிடாகக் கொண்டு செல்லுவோம். வீட்டில் குடும்பத்தார், அயலவர்கள் ஒன்று சேர்ந்து செபமாலை செபிப்போம், பிரார்த்தனைகள் சொல்லுவோம். மாதாவின் திருச்சுரூபம் வீட்டிற்குக் கொண்டு வருவதை ஒரு வைபவமாகவே எடுத்து நடாத்துவோம். வீட்டிற்கு ஒரு முக்கியமான ஒருவர் வந்திருக்கிறார் என்கின்ற எண்ணப்பாடே வீட்டாருக்கு மேலோங்கி இருக்கும். செபமாலை என்பது கத்தோலிக்கராகிய எமக்கு மனித வாழ்க்கை என்னும்

*அருட்பணி. அ.அ. றொஹான் பேணார்ட்*

➜ 2

## மாணவர் தீபம்

கத்தோலிக்க மாணவர்களே,

### மன்னித்தால் தவறா?



இந்த இதழில் மாணவர் தீபத்தில் உங்களுக்கு தரப்பட்டுள்ள தலைப்பு "மன்னித்தால் தவறா?" ஆகும். இந்தத் தலைப்பில் கவிதை அல்லது கட்டுரை அல்லது சிறுகதை எதுவாயினும் எழுதுங்கள்.

உங்கள் கற்பனைத் திறனுக்கு நாம் தரும் சவால் எழுதுங்கள்... எழுதுங்கள் எழுதிக் கொண்டே இருங்கள்.

அனுப்பும் முன் உங்கள் பங்குத் தந்தையிடம் ஒப்பமிட்டு அனுப்பவும். மறைக்கல்வி நிலையத்தில் நேரடியாகவும் ஒப்படைக்கலாம் அல்லது திருமலைத்தீபம், மறைக்கல்வி நிலையம், இல. 297, கடற்ப்படைத்தளவீதி, திருகோணமலை எனும் முகவரிக்கு தபால் மூலம் அனுப்பவும்.

**ஆசிரியர்**
**திருமலைத்தீபம்**

# ஆலயத் திருவிழாக்கள்

### புனித திருமுழுக்கு யோவான் ஆலயம் – சாம்பல்தீவு




### புனித வேளாங்கண்ணி அன்னை ஆலயம் – ஆண்டாங்குளம்





### குவாடலூப்பே அன்னை திருத்தலம் – திருகோணமலை





### சிலுவைமலை ஆலயம் – சாம்பல்தீவு





**பத்திரிகை ஆசிரியரின் பேனா தொடர்ச்சி...**

போராட்டத்தை வெற்றிகொள்ள திருஅவையால் தரப்பட்டுள்ள ஆயுதமே.

அடுத்து நாம் சிந்திப்பது "நிலையில்லா இவ்வாழ்விலே நிலைப்பதோ இறை அருள் ஒன்றே" என்பதாகும். ஆம் "ஆடி அடங்கும் வாழ்க்கையடா ஆறடி நிலமே சொந்தமடா" என்னும் பாடல் வாழ்வின் யதார்த்தத்தைக் கோடிட்டுக் காட்டினாலும் கிறிஸ்தவர்களாகிய எமது இலக்கு விண்ணக வீட்டை அடைந்து படைத்த பரமனை முகமுகமாய்ப் பார்த்து லய்த்து இருப்பதாகும். ஆகவே கார்த்திகை 2ஆம் திகதி இறந்த ஆத்துமாக்களை நினைவு கூர்ந்து மன்றாடுவோம். பாவப்பட்ட ஆத்துமாக்கள் ஈடேற்றம் பெற திருப்பலிகள் ஒப்புக்கொடுப்போம்.

இலங்கைத் திருநாட்டிலுள்ள வடநகரான யாழ்ப்பாணத்தைப் பூர்வீகமாகக் கொண்ட திரு. தர்மன் சண்முகரத்தினம் சிங்கப்பூரின் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப் பட்டிருப்பது இலங்கையர்களுக்கு குறிப்பாக தமிழர்களுக்கு சிறப்பான பெருமைதான்.

ஆசிய நாடுகளில் பல சிங்கப்பூரை விட முன்னதாகவே பிரித்தானியாவிலிருந்து சுதந்திரம் பெற்றுவிட்டன. ஆனால் இந்த நாடுகளில் இனமோதல்கள், மொழிச்சர்ச்சைகள், மதரீதியான தகராறுகள், ஊழல், இலஞ்சம், சுரண்டல்கள், அரசியல், பொருளாதார ஸ்திரமற்ற தன்மைகள், நீதித்துறைக்கு ஏற்படும் அச்சுறுத்தல்கள், கோஷ்டி மோதல்கள், வன்முறைகள், பாலியல் துஷ்பிரயோகங்கள் என ஏகப்பட்ட விவகாரங்களில் சிக்கித்தவிக்கின்றனர் என்பதை நாம் அறிவோம். இப்பேர்ப்பட்ட நாடுகளின் கறைபடிந்த பக்கங்களை படித்துக் கொண்டதாலேயே சிங்கப்பூர்; மேற்கூறப்பட்ட தவறுகள் இல்லாத வெற்றிகரமான அரசாக கட்டியெழுப்பப்பட்டதாக இருக்கிறது என்று சிங்கப்பூரின் முன்னாள் பிரதமர் லீகுவான் யூ பல தடவைகளில் கூறியுள்ளார்.


ஆம் நாம் எமது நாட்டை திறம்பட கட்டியெழுப்ப வேண்டுமென்றால் முதலில் இனத் துவேஷத்தை களைய வேண்டும். சமத்துவம் எல்லா இடங்களிலும், செயல்களிலும் பேணப்பட வேண்டும். ஊழல்கள், சுரண்டல்கள் நிறுத்தப்பட வேண்டும். பாலியல் வன்கொடுமைகள் நிகழாதவாறு பாதுகாத்துக்கொள்ள வேண்டும்.

நல்லிணக்கம், சமாதானம் பற்றி பேசும் அரச தரப்பு தமிழர்கள் செறிந்து வாழும் இடங்களில் புத்தசிலைகளையும், விகாரைகளையும் கட்டுவதற்கு பௌத்த பிக்குகளுக்கு இடமளிப்பது ஏன்? என்னும் கேள்வியைக் கேட்டுக்கொண்டே தான் இருக்க வேண்டியிருக்கிறது. அதுமட்டுமா நீதித்துறைக்கு நேர்ந்திருக்கும் கதி உலகின் எந்த நாட்டிலும் கேள்விப்படாத ஒன்றாகவே இருக்கிறது. ஆகவே எமது நாட்டின் அரசியல் தலைவர்களுக்காக விசேடவிதமாக செபிப்போம். அவர்களும் மனம் மாறட்டும்.

திருமலைத்தீபம்
மறைக்கல்வி நடுநிலையம்
இல. 297, கடற்படைத்தள வீதி
திருகோணமலை
ஆசிரியர் - 026 222 1012
Theepamlink@gmail.com

சிலுவைமலை இது திருச்சிலுவைமலை
சிலுவையின் மகிமை நிறைந்த மலை
விசுவாசத்தை எம்மில் ஊட்டும் மலை
விசுவாசிகள் எமக்கு ஒளியின் மலை

சி



பாரமான சிலுவை இயேசு மீது
பாசத்தோடு அள்ளி அணைத்தார் இயேசு
பாவப்பட்ட மனுக்குலத்தின் மீட்புக்காக
பாரெங்கும் சிலுவை மகிமை பரவ வேண்டும்

லு



தண்ணீரும் இரத்தமும் வழிந்தனவே நெஞ்சாலே
தாகம் கொண்ட இயேசுவுக்கோ
தண்ணீர் இல்லை
தன்னலமும் சுயநலமும் மனித இனத்திற்கே - இந்த
தரணியை மீட்கவே இயேசு சிலுவையிலே

வை



சிலுவையை சுமந்து வரச்சொன்னார் இயேசு - அது
எத்தனை பாரம் என்று கற்பித்தார் இயேசு
மூன்று மணிநேர மரண வேதனை
முகம் கொடுக்க தயாராகு இம்மண்ணிலே

ம



லை

*அருட்பணி. அ.அ. றொஹான் பேணார்ட்*

## மதிப்பு...



ஆற்றங்கரை ஓரமாக வந்துகொண்டிருந்த வழிப்போக்கன்
ஒருவனுக்கு வைரக்கல் ஒன்று கண்ணில் பட்டது.

இது வைரம் என்றறியாமல்,
விலை போகுமோ என்ற
சந்தேகத்துடன் கடைத்தெருவுக்கு எடுத்து வந்தான்.

அவன் கையில் வைரம் இருப்பதைப் பார்த்த வியாபாரி ஒருவன்,
இருபது ரூபாய்க்கு தன்னிடம் அதை விற்குமாறு கேட்டான்..

ஆனால் வழிபோக்கனோ பேரம் பேசித்தான் பார்ப்போமே என்ற
எண்ணத்துடன் 25 ரூபா கேட்டான்..

ஐந்து ரூபாய் அதிகம்
கொடுக்க விரும்பாத அந்த வியாபாரியும்
இருபது ரூபாய்க்கு பேரம் பேசினான்..

இதைக் கவனித்த
மற்றொரு வியாபாரி 25 ரூபாய் கொடுத்து
அந்த வைரத்தை வாங்கிக்கொண்டு சென்றான்..

ஆத்திரமடைந்த வியாபாரி,
அந்த வழிப்போக்கனை பார்த்து,
"அட முட்டாளே! அதன் மதிப்பு பல ஆயிரம் பெறும்...
அறிவில்லாமல் விற்றுவிட்டாயே" என்று திட்டினான்..

அதற்கு வழிப்போக்கன், "அந்தக் கல்லுக்கு என்னுடைய
மதிப்பு அவ்வளவு தான்..
ஆனால் அது வைரம், அதன் மதிப்பு தெரிந்தும் அதைத்
தவறவிட்ட நீ தான் முட்டாள்" என்றான்..

**சிலர் இப்படித்தான் உண்மையான மதிப்பு தெரிந்தும், கிடைத்ததை விட்டுவிட்டுத் தவிக்கிறார்கள்.**

**இணையம்**

## 37வது ஆண்டு விழா



06.08.2023 ஆம் திகதி உவர்மலை குழந்தை இயேசு ஆலய வரபிரசாதமாதா பிரசீடியத்தினர் தமது சேனையின் அகவை 37வது விழாவினை சிறப்பிக்கும் முகமாக 3,4,5 ஆம் திகதிகளில் தமது ஆன்மீக வாழ்வினை வலுப்படுத்த நற்கருணை ஆண்டவருடன் ஆயத்த வழிபாடுகளில் இணைந்து தம்மை ஆயத்தம் செய்து இறுதி நாளில் இதுவரை வழிநடத்திய இறைவனுக்கு நன்றிகூறி திருப்பலியினை சிறப்பித்தார்கள். இவர்களுடன் சேனையின் முந்நாள் சகோதரிகளும் மற்றும் கொமித்சிய சகோதரிகளும் பங்கேற்று சிறப்பித்தனர். சிறப்புத் திருப்பலியினை பங்குத்தந்தையும், வரபிரசாத மாதா பிரசீடியத்தின் ஆன்மீக குருவுமான அருட்பணி. X.I ரஜீவா அவர்கள் ஒப்புக்கொடுத்தார்.

K. பிரஷாந்தி

## இன்னுமா தயக்கம் – 29

# உண்மையா அது என்ன?

ஒரு சிறுவன் தன் தந்தையிடம் பாடசாலைக்குச் சென்று வருகின்றேன் என்று கூறி செல்கின்றான். ஆனால் அன்று பாடசாலை விடுமுறை. இது தன் தந்தைக்குத் தெரியாது என்று எண்ணி அவன் தன் நண்பர்களோடு மைதானத்தில் விளையாடிவிட்டு வீட்டிற்கு வருகின்றான். தன் தந்தை அதைக் கண்டுபிடித்துவிடக் கூடாது என்று தன் கை கால்களையெல்லாம் கழுவிவிட்டு தந்தையின் முன் வந்து நிற்கின்றான். அப்பாவிடம் பாடசாலையில் சிறப்பு வகுப்பு நடந்ததென்று சொல்லிவிடலாம் என்று அவன் நினைத்துக் கொண்டிருக்கின்றான். அப்பா அவனிடம் மிகவும் கோபமாக “எங்கே சென்று வந்தாய்?” என்று கேட்கின்றார். இந்த சிறுவன், மைதானத்தில் தன் நண்பர்களுடன் விளையாடிவிட்டு வந்தேன் என்று சொன்னால் அப்பா கோபப்படுவார். எனவே என்ன சொல்வது எளிது? பொய் சொல்வதா, உண்மை பேசுவதா?

பல வேளைகளில் பொய் சொல்வது தான் எளிது என்று நினைப்போம். பொய் சொல்ல வேண்டும் என்றால் ஒரு நேர்த்தியான கதையை தன் தந்தை நம்பும் வண்ணம் உருவாக்கி சொல்ல வேண்டும். சிறிது பிழைத்துவிட்டால் மிகப் பெரிய பிரச்சனையாகிவிடும். ஆனாலும் எவ்வளவு நேர்த்தியாக சொன்னாலும் பொய் என்பது என்றாவது ஒரு நாள் வெளிவந்து பெரிய பிரச்சனையை உருவாக்கிவிடும் என்பது எல்லோருக்கும் தெரியும். எனவே ஒவ்வொரு நாளும் இது நம் மனதைக் குத்திக் கொண்டே இருக்கும். பிரச்சனை தீராமல் தொடர்ந்து கொண்டே இருக்கும்.

ஆனால் உண்மையைச் சொல்லிவிட்டால், அப்பா கோபப்படுவார், ஆனால் அந்தப் பிரச்சனை அத்துடன் முடிந்துவிடும். அதன் பின் அதைப் பற்றி நாம் கவலைப்படவே தேவையில்லை, அது தீர்ந்துவிடும்.

இப்போது நாம் சிந்தித்துப் பார்ப்போம்: உண்மை பேசுவது எளிதா, பொய் பேசுவது எளிதா? எவ்வளவு தான் நேர்த்தியாகப் பொய் சொன்னாலும் அது ஒருநாள் வெளிவந்துவிடும். ஆனால் உண்மை பேச நாம் கதை ஏதும் உருவாக்கத் தேவையில்லை. நடந்த உண்மையை அப்படியே சொன்னால் அது பல பிரச்சனைகளைத் தீர்த்துவிடும்.

எனவே உண்மை பேசுவதே எளிது என்பது நமக்குப் புரியும். அது போல பிறரோடு சண்டையிடுவதை விட நட்புறவோடு செல்வதே எளிது. திருடுவதை விட திருடாமல் இருப்பதே எளிது. இதையே ஆண்டவர் இயேசு, “உண்மை” என்று கூறுகின்றார். இதை நாம் உணர்ந்து கொள்வதில்லை. காரணம் நாம் இந்த உலகம் கற்றுத் தந்த மாயைகளால் நிரப்பப் பட்டிருக்கின்றோம். அந்த மாயை நம்மைக் கட்டுப் படுத்துகின்றது. எனவே நாம் உண்மையை உணர்ந்து கொள்ள முடியாமல் மாயை நம் கண்களை மறைத்துவிடுகின்றது.

இந்த மாயையிலிருந்து நாம் விடுபட்டு உண்மையை உணர்ந்து கொள்ள வேண்டும் என்பதே நம் ஆண்டவர் நமக்குக் கற்றுத் தந்த பாடமாகும். நம் மனதை இந்த உலகின் மாயைகள் மறைத்துக் கொண்டே இருக்க நாம் தொடர்ந்து உண்மையை அறிய முடியாத பாவிகளாகவே இருக்கின்றோம்.

இறைவன் கற்றுத் தரும் உண்மையை நாம் அறிந்து கொள்ள முதலில் நாம் நம் உள்ளத்தை தூய்மையாக்க வேண்டும். இதற்கு ஒரு சிறந்த உதாரணத்தைப் பார்க்கலாம்.

ஒரு ஊரில் விவசாயிகள் கூட்டம் தங்கள் முதலாளியிடமிருந்து ஊதியமாகப் பெற்ற நெல் பைகளை மாட்டு வண்டியில் வைத்து எடுத்து வரும் வழியில் அந்த வண்டி குடை சாய்ந்து ஒரு சேறு நிறைந்த பள்ளத்தில் விழுந்துவிடுகின்றது. அதனால் அந்த நெல் பைகள் அனைத்தும் சேற்றுக்குள் மூழ்கிவிடுகின்றது. அவற்றை ஒவ்வொன்றாக எடுத்து மீண்டும் மாட்டுவண்டியில் ஏற்றி தங்கள் வீடுகளுக்குக் கொண்டு வருகின்றனர். ஒரு விவசாயி தனக்கு ஊதியமாகக் கொடுக்கப்பட்ட நெல் பையை வீட்டிற்கு எடுத்து வந்து தன் மனைவியிடம் கொடுத்துவிட்டு வெளியே செல்கின்றார். கடைத் தெருவில் தங்கள் முதலாளியைப் பற்றி சக விவசாயிகள் மிகவும் மோசமாக சொல்வதைக் கேட்டு மிகவும் மனம் வேதனையடைகின்றார். “இந்த முறை நமது முதலாளியின் தோட்டத்தில் மிகவும் நல்ல விளைச்சலை நாம் உருவாக்கித் தந்துள்ளோம். ஆனால் நமக்கு அவர் கொடுத்ததெல்லாம், ஒரு சாக்குப் பை நிறைய சேறு நிறைந்த நெல் தான். இதை நாம் எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்... என்று புலம்பிக் கொண்டிருக்கின்றார்கள். சேற்றுக்குள் நெல் பைகள் விழுந்ததற்கு முதலாளி எப்படிப் பொறுப்பாக முடியும் என்று நினைத்தவாறே இந்த விவசாயியும் தன் வீட்டிற்கு வருகின்றார். வழியில் அவரது நண்பரின் மனைவியைப் பார்க்கின்றார். அவரிடம் இந்த விவசாயி “உங்களுக்கு கொடுத்த நெல் எப்படிப்பட்ட நெல்?” என்று கேட்க, அந்தப் பெண்மணி, “நெல்லில் சேறு இருந்தது உண்மை தான். ஆனால் அந்தச் சேற்றை கழுவியபின் மிகவும் தரமான நெல் கிடைத்தது. நம் முதலாளிக்கு நன்றி!” என்று சொல்கின்றார். சற்று ஆறுதலடைந்த விவசாயி தன் வீட்டிற்குச் செல்கின்றார். அவரது மனைவி அவருக்காக இனிப்புகள் எல்லாம் செய்து வைத்துக் காத்துக் கொண்டிருக்கின்றார். அவரது மனைவியிடம் காரணத்தைக் கேட்கின்றார்.

அவரது மனைவி முதலாளி கொடுத்த நெல் மணிகளோடு கொஞ்சம் தங்க நெல்மணிகளும் இருந்தன. அவற்றைக் கண்டு பிடித்ததால் தான் மிகவும் மகிழ்ச்சியாக இருப்பதாகவும் அந்த மகிழ்ச்சியைக் கொண்டாட இனிப்புக்கள் செய்ததாகவும் கூறுகின்றார்.

மிகவும் ஆச்சரியத்துடன், அந்த தங்க மணிகளைப் பார்க்க செல்கின்றார். அப்போது அவரது மனைவி, அவர் முன், ஒரு பெரிய பாத்திரத்தைக் காட்டுகின்றார். அந்தப் பாத்திரத்தில் இவர் கொடுத்த நெல் மணிகளைக் கொட்டி மிகவும் வேகமாகப் பாயும் தண்ணீர்க்குழாயின் அடியில் வைக்கின்றார். தண்ணீர் பாய்ந்த வேகத்தில் நெல்லில் உள்ள பதர், சேறு என்று முதலில் நீங்க தெளிந்த நீரில் தரமான நெல்மணிகள் காட்சியளித்தன. இன்னும் நீர் வேகமாகப் பாய, அந்த நெல்மணிகளும் கொஞ்சம் கொஞ்சமாக வெளியே வர பாத்திரத்தின் அடியில் ஏதோ மினுமினுப்பாய் காட்சியளிக்க, நெல்மணிகளையெல்லாம் பத்திரமாக வேறு பாத்திரத்தில் அள்ளி வைக்க, பாத்திரத்தின் அடியில் அழகான தங்க நெல் மணிகள் தங்கியிருப்பதைக் காண்கின்றான்.

உடனடியாக அந்த விவசாயி முதலாளியைச் சந்தித்து நன்றி செலுத்துகின்றார். அவர் அவரைப் பாராட்டிவிட்டு, “உனக்குக் கொடுத்தது போல அனைவருக்குமே கொடுத்தேனே, தங்க மணிகளை உன்னால் மட்டுமே கண்டு பிடிக்க முடிந்திருக்கின்றது. மற்றவர்கள் அதிலுள்ள சேற்றைப் பார்த்துவிட்டு புலம்பிக் கொண்டிருக்கின்றனரோ?” என்று கேட்டாராம்.

இந்த நிகழ்வில் வரும் நெல் பை, நம் ஒவ்வொருவருக்கும் இறைவன் கொடுத்துள்ள மனமாகும். இந்த மனதில் பல நல்ல எண்ணங்களை இறைவன் வைத்தே நமக்குத் தருகின்றார். ஆனால் நமது மனித பலவீனத்தால் தீமைகளை நம் மனதில் சேறு போன்று நாம் தான் கொண்டு வருகின்றோம். அந்த சேற்றை நாம் நீக்கும் போது சற்று குறைவான மதிப்புள்ள நன்மைகள் (நெல் மணிகள் போன்று) நமக்குக் கிடைக்கின்றன. இன்னும் ஆழமாக சுத்தம் செய்ய விழையும் போதே நம் அடி மனதிலுள்ள உன்னதமான நன்மைகள் (தங்க மணிகள்) நம் கண்களுக்குத் தென்படுகின்றன. அந்தத் தங்க மணிகளுக்காக நாம் நம் மனதிலுள்ள நெல் மணிகளை அகற்றும் போது அந்தத் தங்க மணிகளை நாம் பெற்றுக் கொள்கின்றோம்.

இப்போது அந்த பை நமது மனம் என்றும் அதிலுள்ள பொருட்கள் நம் எண்ணங்கள் என்றும் தெரிந்து கொண்டோம். அந்த மனதைச் சுத்தம் செய்யும் தண்ணீர் தான் நம் பக்தி முயற்சிகள். நாம் ஆலயத்திற்கு சென்று நம் மனதை சுத்தம் செய்யும் செயலைத் தான் செய்து கொண்டிருக்கின்றோம். நம் மனதை சுத்தம் செய்ய விருப்பமில்லாத போது நாம் அதன் எதிர்மறை எண்ணங்களிலே அதாவது சேறு நிறைந்த நிலையிலேயே நாம் நிம்மதியடைந்து விடுகின்றோம். அந்த மனதில் எந்த நன்மையும் புலப்படப் போவதில்லை. காரணம் சேறும் சகதியும் தான் அதில் வெளிப்பட முடியும்.

வேறுவகை மனிதர்கள், தங்கள் பக்தி முயற்சியால் சிறிதளவு சுத்தம் செய்கின்றார்கள். அவர்கள் நெல்மணிகளைக் கண்டடைகின்றார்கள். அவர்கள் நெல்மணிகளில் திருப்தி அடைந்து விடுகின்றார்கள். நெல் மணிகளில் அரிசி இருந்தாலும் அதைச்



சுற்றி சிறிதளவு எதிர்மறை செயலான உமி சூழ்ந்திருக்கின்றது. அதாவது, கொஞ்சம் நன்மை, கொஞ்சம் தீமை என்று வாழ்கின்றார்கள். இவர்கள் சராசரி மனிதர்களாவர்.

ஆனால் இறைவனுக்கு மிகவும் உகந்த மனிதர்கள். தங்கள் உச்சகட்ட பக்தி முயற்சிகளாலும் இறைவனோடு கொண்ட நெருக்கத்தாலும் இந்த நெல்மணிகளையும் தாண்டி உச்சகட்ட நன்மைத் தனத்தை தங்கள் மனதில் கண்டு பிடிக்கின்றார்கள். உயர்ந்த நன்மை, உன்னத பண்பு ஆனால் மாசற்ற தன்மை என்ற நிலையை அவர்கள் அடைகின்றார்கள். இன்று நாம் எந்த நிலையில் இருக்கின்றோம் என்பதை சற்று ஆய்ந்து அறிவோம்.

உலகத்தின் மாயைகளில் நாம் விழுந்து விடுகின்றோம் என்றால் அந்த மாயை தொடர்ந்து நமக்கு எதிர்மறை எண்ணங்களையே உருவாக்குகின்றது. அது நம் மனதின் நன்மைகளை நாம் அறிந்து கொள்ள முடியாமல் செய்து விடுகின்றது. ஆனால் நாம் தூய ஆவியாரால் வழிநடத்தப்படும் போது உண்மையை அறிந்து கொள்கின்றோம். அந்த உண்மை நம் உள்ளத்தில் உள்ள உச்சகட்ட நன்மையை நாம் அறிந்து கொள்ள உதவி செய்கின்றது. நாமும் அந்த நன்மையை அடைந்த மக்களாக வாழ்கின்றோம்.

சற்று சிந்தித்துப் பார்ப்போம் நாமும் உண்மைக் கிறிஸ்தவர்களாக உச்சகட்ட நன்மையை நம் உள்ளத்தில் கண்டடைந்தவர்களாக வாழ முயல்வோம். இறைவன் நம்மை நிறைவாக ஆசீர்வதிப்பாராக.

இறையாசீருடன்
அருட்பணி. அலெக்ஸ் மரிய செல்லையா

# திருச்சிலுவை மகிமை விழா



மறைத்திரு. மரிய அந்தோணிராஜ்
பாளையம் கோட்டை மறைமாவட்டம்

செப்டம்பர் 14 ஆம் திகதி சிலுவை உயர்த்தப்பட்ட திருவிழா அல்லது திருச்சிலுவை மகிமையின் திருவிழாவை நாம் கொண்டாடுகிறோம். திருச்சிலுவை அது அவமானத்தின், மடமையின், கயமைத்தனத்தின், தண்டனையின் அடையாளம் அல்ல. மாட்சி, மகிமை, பெருமை, புனிதம் அனைத்தும் ஒன்றாக இயேசுவால் நமக்கு வழங்கப்பட்ட அருட்கருவியாக இருக்கிறது.

திருச்சிலுவை மரம் இதோ இதிலே தான் தொங்கியது. உலகத்தின் இரட்சணியம் வாரீர் ஆராதிப்போம்.... இந்தப் பாடலை நாம் யாரும் மறந்திருக்க மாட்டோம். ஒவ்வொரு புனித வெள்ளிக்கிழமை அன்றும் உணர்ச்சி பொங்க குருவானவர் சிலுவையை சுமந்து கொண்டு, அந்த சிலுவையை ஒவ்வொரு காயங்களாக எடுத்து அதை உயர்த்தி பிடித்து திருச்சிலுவை மரம் இதோ உற்றுப் பாருங்கள், இதிலே தான் நம் மீட்பர் தொங்கி, நம்மையெல்லாம் மீட்டார் என்று சொல்ல மக்களெல்லாம் வருகிறோம் வந்து ஆராதிக்கிறோம் என்று சொல்லி இயேசுவின் காயங்களை, இயேசு தொங்கிய சிலுவையை நாம் முத்தி செய்து ஆராதிக்கின்ற சிறப்பான வழிபாட்டை கொண்டாடுகிறோம்.

312 ஆம் ஆண்டு ஒக்டோபர் 20 ஆம் நாள் கொன்ஸ்ரன்ரைன் பேரரசர் மக்சென்சியஸ் என்ற அரசர் மீது படையெடுத்துச் சென்று போர் தொடுத்தார். அப்போது படைவீரர்கள் சிலுவை அடையாளம் பதித்த கொடிகளுடன் போர் புரிந்து பெரும் வெற்றி பெற்றனர். இந்த பெரும் வெற்றியின் நிமிர்த்தமாக பேரரசர் கொன்ஸ்ரன்ரைன் கிறிஸ்தவ மதத்தை அரச மதமாக அறிவித்தான்.

13 ஆண்டுகள் கழித்து பேரரசர் கொன்ஸ்ரன்ரைனின் தாய் புனித ஹெலன் ஜெருசலேமிற்கு திருப்பயணம் சென்று ஆண்டவருடைய பிறந்த இடம், வாழ்ந்த இடம், அவர் சிலுவையிலே அறையப்பட்ட இடம் என்று அவர்கள் அகழ்வாராட்சியில் ஈடுபட்டார்கள். அப்படிக் கல்வாரியிலே அகழ்வாராட்சியில் ஈடுபட்ட போது அங்கே 3 சிலுவைகளை அவர்கள் கண்டெடுத்தார்கள். இந்த 3 சிலுவையில் எது இயேசுவின் சிலுவை எது கள்வனின் சிலுவை என்று அவர்களுக்குத் தெரியவில்லை. ஆகவே சூம்பிய கையன் ஒருவனை அழைத்து அந்த சிலுவைகளில் ஒவ்வொன்றாக தொடச் சொன்னார்கள். சூம்பிய கையன் ஒரு சிலுவையை தொட்டபோது சூம்பிய கை முற்றிலுமாக குணம் பெற்றது. சூம்பிய கை சுகம் பெற்றதனால் அந்த குணமளித்த சிலுவையே இயேசு சுமந்த உண்மையான பரிசுத்தமான திருச்சிலுவை என்று நம்பி உரோமை நகருக்கு திருச்சிலுவையைக் கொண்டு வந்தார்கள். ஆலயம் ஒன்றை எழுப்பி அதில் திருச்சிலுவையை நிறுவினார்கள்.

திருச்சிலுவை உரோமையில் உள்ள ஆலயத்தில் நிறுவியதனால் 326 ஆம் ஆண்டு செப்டம்பர் 14 ஆம் நாள் அன்றிலிருந்து இன்று வரை செப்டம்பர் 14 ஆம் திகதி திருச்சிலுவை உயர்த்தப்பட்ட நாள் விழாவை திருஅவை கொண்டாடி வருகிறது.

614 ஆம் ஆண்டு பெர்சிய மன்னன் சொஸ்ரோஸ் உரோமைக்கு படையெடுத்து சென்று இயேசுவின் புனிதமிக்க திருச்சிலுவையை திருடிவிட்டுச் சென்றான் என்ற செய்தி அறிந்த ஹெரோக்கிலியஸ் என்ற மன்னன் 628 ஆம் ஆண்டு பெர்சியா மீது படையெடுத்து திருச்சிலுவையை மீட்டு வந்து, திருச்சிலுவை ஆலயத்தில் மீண்டும் நிறுவினான்.

1970 ஆம் ஆண்டு வரை திருச்சிலுவை உயர்த்தப்பட்ட நாள் என்றே இந்த விழா கொண்டாடப்பட்டது. ஆனால் 1970 ஆம் ஆண்டிற்கு பிறகு, திருஅவை திருச்சிலுவையின் மகிமையின் நாள், திருச்சிலுவையின் முக்கியமான அதனுடைய பேருண்மைகளை தியானிக்கும் நாளாக திருச்சிலுவையின் மகிமையின் நாள் The exaltation of the cross என்ற பெயரில் கொண்டாடப்பட்டு வருகிறதைப் பார்க்கிறோம்.

திருத்தந்தை பெரிய கிரகோரியார் திருச்சிலுவை நன்மைகளின் ஊற்று என்கிறார். காரணம் இந்த சிலுவையில் இருந்து தான் தேவ வல்லமையை இயேசு ஆண்டவர் தெய்வீகமாக தன் இரக்கத்தின் வழியாக பொழிந்தார். ஆகவே கிறிஸ்தவர்கள் எல்லா நன்மைகளையும் இந்த சிலுவையில் இருந்தே பெறுகின்றார்கள் என்று பார்க்கிறோம்.

1கொரிந்தியர் 1:22-23 வசனத்திலே, யூதர்கள் அரும் அடையாளங்கள் வேண்டுமென்று கேட்கிறார்கள். கிரேக்கர்கள் ஞானத்தை நாடுகிறார்கள். ஆனால் நாங்கள் சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பற்றி பறைசாற்றுகிறோம். அச்சிலுவை யூதர்களுக்கு தடைக்கல்லாகவும், பிற இனத்தாருக்கு மடமையாகவும் இருக்கிறது என்று புனித பவுலடியார் கூறுவதை நாம் பார்க்கிறோம்.

அன்புக்குரியவர்களே, நான் மண்ணிலிருந்து உயர்த்தப்படும் போது, அனைவரையும் என்பால் ஈர்த்துக் கொள்ளுவேன் என்று யோவான் 13:32 இல் நாம் வாசிக்கிறோம். இன்று தாய் திருஅவை திருஅவையின்



மகிமை The exaltation of the cross என்ற இந்த திருவிழாவைக் கொண்டாடுகிறது. இந்த திருவிழா 3 வரலாற்று நிகழ்வுகளை எமக்கு நினைவூட்டுகிறது.

புனித ஹெலன் உண்மையான இயேசுவின் திருச்சிலுவையை ஜெருசலேம் கல்வாரி மலையிலே கண்டுபிடித்து. இரண்டாவது பேரரசர் கொன்ஸ்ரன்ரைன் கல்வாரி மலையில் கட்டப்பட்ட ஆலயங்களை கடவுளுக்கு அர்ப்பணித்தது. மூன்றாவது ஜெருசலேமிற்கு உண்மையான சிலுவை மீண்டும் கொண்டுவரப்பட்டது.

இதையெல்லாம் விட இந்த விழா உணர்த்தும் ஆழமான பொருள் என்ன தெரியுமா? திருச்சிலுவை நமது மீட்பின் கருவி என்பதை கொண்டாடும் விழாவாகும். The holy cross is the instrument of our salvation மிகக் கொடியவர்கள், கொள்ளையர்கள், தேவதூஷணம் பேசியவர்கள் அரசனுக்கு எதிராக பிரமாணிக்கம் இல்லாமல், அரச குற்றம் செய்தவர்களுக்கு வழங்கப்பட்ட மிகக் கொடிய குற்றவாளிகளை தண்டிக்க உருவாக்கப்பட்டு, துன்புறுத்தி வதைக்கும் இச்சிலுவை, வாழ்வளிக்கும் மரமாக மாறியது.

புனித மான்பொட் திருச்சிலுவை தான் ஞானம், ஞானமே திருச்சிலுவை என்கிறார். நல்ல கள்வன் திருச்சிலுவையின் மீட்பின் வல்லமையை முதலில் அனுபவித்தவன். சிலுவையில் துன்புறும் ஊழியனாக, துன்புறும் ஆண்டவரை ஏற்று தனது விசுவாசத்தை வெளிப்படுத்தி ஒரு புனிதனாக மாறியவன் நல்ல கள்வன்.

புனித பவுஸ்தினா துன்பமான வேளையில், திறக்கப்பட்ட நிலையில் அமைதியாக காணப்படும் இயேசுவின் இதயத்தையே உற்றுப் பார்க்கிறேன், பற்றி எரியும் இரக்கமிக்க இதயத்திலிருந்து தொடர்ந்து நான் போராடுவதற்கு எனக்கு தேவையான ஆற்றலும், வலிமையும் பொழியப்படுகிறது என்கிறார்.

சிலுவைக்கு அவ்வளவு வல்லமை உண்டு. சிலுவைக்கு மட்டும் தான் தீயவனாகிய சாத்தான் பயப்படுவான். நம் கரங்களில் சிலுவையை ஏந்தி, சிலுவை அடையாளம் வரைந்து தந்தை, மகன், தூயஆவி என்ற பெயரிலே, இயேசு எந்த சிலுவையைக் கொண்டு தீமையைக் கொன்று பாவத்தை, நோய்களை, பேய்களை விரட்டியடித்து நம்மை முழுமையாக மீட்டாரோ, அதே சிலுவையைக் கொண்டு நாம் வெற்றி பெற, தீமைகளுக்கு எதிராக போராட, தீய சோதனைகளில் விழுந்து விடாமல் இருக்க, பாவத்தில் விழாமல் இருக்க, நோயாளர்களை குணப்படுத்த நம் இல்லங்களில் சிலுவைகளை உயர்த்துவோம், சிலுவைகளை தொங்க விடுவோம்., சிலுவைக்கு முன்னால் நின்று ஜெபிப்போம். நம் துன்ப வேளைகளில் சிலுவையை உற்று நோக்குவோம்.



# இனிய இல்லறம்

இவ்வுலகில் நாம் காணும் அனைத்தையும் படைத்த இறைவன், படைப்புகள் அனைத்திற்கும் மேலாக, மனிதரைப் படைத்தார். “கடவுள் மனிதரைத் தம் உருவிலும், தம் சாயலிலும் படைத்தார்.” (தொ. நூ 1:26-27)

இறைவன் மனிதனுக்கு உயிரையும், உள்ளத்தையும், அறிவையும் அவற்றின் ஆற்றல்களையும் கொடுத்துள்ளார். மனிதனுக்கு அழியாத ஆன்மாவையும் அளித்து இறைசாயலில் பங்களித்துள்ளார். ஆன்மா + உடல் + மனது = மனிதன்

முதலில் நாம் தெரிந்துகொள்ள வேண்டியவை

- கடவுளால் படைக்கப்பட்டவர் நாம், விலைமதிப்பற்றவர் நாம்.
- கடவுள் படைக்கும்போது ஆணும் பெண்ணுமாகப் படைத்தார்.
- நாம் கடவுளின் உருவிலும், சாயலிலும் உருவாக்கப்பட்டவர்கள்.
- நாம் பரிசுத்த ஆவியின் ஆலயம், கடவுள் நம்மைக் காப்பாற்றுகின்றார்.

### இறைவார்த்தைகள்

யாக்கோபே, உன்னைப் படைத்தவரும், இஸ்ராயலே உன்னை உருவாக்கியவருமான ஆண்டவர் இப்போது இவ்வாறு கூறுகிறார். உன் பெயரைச் சொல்லி உன்னை அழைத்தேன் நீ எனக்கு உரியவன். (எசாயா 43:1)

கருப்பையில் இருக்கும்போதே, ஆண்டவர் என்னை அழைத்தார் என் தாய் வயிற்றில் உருவாகும்போதே, என் பெயர் சொல்லிக் கூப்பிட்டார். (எசாயா 49:1)

பால் குடிக்கும் தன் மகவை, தாய் மறப்பாளோ? கருத்தாங்கினவள் தன் பிள்ளை மீது இரக்கம் காட்டாதிருப்பாளோ? இவர்கள் மறந்திடினும் நான் உன்னை மறக்கவே மாட்டேன். இதோ, என் உள்ளங்கையில் உன்னை நான் பொறித்து வைத்துள்ளேன். (எசாயா 49:15-16)

வானத்துப் பறவைகளை நோக்குங்கள். அவை விதைப்பதுமில்லை, அறுப்பதுமில்லை களஞ்சியத்தில் சேர்த்து வைப்பதுமில்லை. உங்கள் விண்ணகத் தந்தை அவற்றுக்கும் உணவு அளிக்கிறார். அவற்றைவிட நீங்கள் மேலானவர்கள் அல்லவா! கவலைப்படுவதால் உங்களில் எவர் தம் உயரத்தோடு ஒரு முழம் கூட்ட முடியும்? உடைக்காக நீங்கள் ஏன் கவலைப்படுகிறீர்கள்? காட்டு மலர்ச்செடிகள் எப்படி வளர்கின்றன எனக் கவனியுங்கள். அவை உழைப்பதுமில்லை, நூற்பதுமில்லை ஆனால், சாலமோன்கூடத் தம் மேன்மையில் எல்லாம் அவற்றில் ஒன்றைப் போலவும் அணிந்திருந்ததில்லை என நான் உங்களுக்குச் சொல்கிறேன். நம்பிக்கை குன்றியவர்களே, இன்றைக்கு இருந்து நாளைக்கு அடுப்பில் எரியப்படும் காட்டுப்புல்லுக்குக் கடவுள் இவ்வாறு அணிசெய்கிறார். என்றால், உங்களுக்கு இன்னும் அதிகமாய்ச் செய்யமாட்டாரா?(மத் 6:25-30)

நாம் இவ்வாறு அழைக்கும்போது, நம் உள்ளத்தோடு சேர்ந்து தூய ஆவியாரும் நாம் கடவுளின் பிள்ளைகள் என்பதற்குச் சான்று பகர்கிறார். (உரோ 8:16)
எனவே, ஒருவர் கிறிஸ்துவோடு இணைந்திருக்கும்போது அவர் புதிதாகப் படைக்கப்பட்டவராய் இருக்கிறார். பழையன கழிந்து புதியன புகுந்தன அன்றோ! (2கொரி 5:17)
உங்கள் கவலைகளையெல்லாம் அவரிடம் விட்டுவிடுங்கள். ஏனென்றால், அவர் உங்கள்மேல் கவலை கொண்டுள்ளார். (1பேதுரு 5:7)

இவ்வாறு கடவுளால் படைக்கப்பட்ட ஒவ்வொரு மனிதரும், தம்மை அறிந்து கொள்ளவேண்டியது மிகவும் அவசியம். குறிப்பாக, திருமணத்திற்கு உங்களைத் தயார் செய்யும் நிலையில் உள்ளதால், உன்னைப்பற்றி நன்கு தெரிந்து வாழ்க்கையைப் பயனுள்ளதாக மாற்றிக் கொள்வது மிகவும் சிறந்தது.

உன்னை அறிந்துகொள்ளச் சிறு பயிற்சி

### நான் யார்?

- என்னிடமுள்ள நல்ல பண்புகள் என்ன?
- என்னிடமுள்ள குறைகள் என்ன?
- என்னிடமுள்ள இலட்சியம், குறிக்கோள்?
- உன்னைப்பற்றிப் பிறர் கூறியபோது உனது மனநிலை எவ்வாறு இருந்தது?
- பிறரைப்பற்றி நீ கூறியபோது, உனக்கு ஏற்பட்ட அனுபவங்கள் யாவை?
- உன்னைப்பற்றி நீ மட்டும் மதிப்பீடு செய்வதற்கும், உன்னைப்பற்றி மற்றவர்கள் மதிப்பீடு செய்வதற்கும் என்ன வேறுபாடுகள் காண்கிறாய்?
- இந்தப் பயிற்சியில் நீ அறிந்து கொண்டவை என்ன?

கடவுள் என்னை எப்படிப் பார்க்கிறார்? என்னுடைய குடும்பம் என்னை எவ்வாறு பார்க்கிறது? மற்றவர்கள் என்னை எப்படிப் பார்க்கிறார்கள்? என்னையே நான் எப்படிப் பார்க்கிறேன்?

### மனிதன் ஒரு சமூக உயிரி

மனிதர் தனியாக வாழ்பவர் அல்லர். அவர் சமூகத்துடன்தான் வாழ வேண்டும். வாழமுடியும். ஒருவர் முழு மனிதராக மனிதப் பண்புகளுடன் வாழவேண்டுமெனில், அது மனித சமூகத்தில்தான் முடியும் எனவே, நீ உன்னை அறிய, நீ வாழும் சமூகமும் உனக்குத் துணைபுரிகிறது. மனிதர்கள் அகநோக்கு, புறநோக்கு என இருவகை நோக்குகளைக் கொண்டுள்ளனர்.

அகநோக்கு உடையவர்கள் தன்னைப்பற்றி அதிக அக்கறை கொண்டுள்ளார்கள். அதிகமாகத் தன்னைப் பற்றியே சிந்திப்பதால் அக வளர்ச்சி அதிகமாக இருக்கும்.

புறநோக்கு உடையவர்கள் ஒன்றிலிருந்து மற்றொன்றுக்குத் தாவிக்கொண்டே இருப்பர். வாழ்க்கையைச் சீர்தூக்கிப் பார்க்கமாட்டார்கள். உள்ளார்ந்த வளர்ச்சியற்றவர்களாகவே இருப்பர். முழுமையான மனிதத் தன்மைக்கு அக, புறநோக்கு சமநிலையைக் கொண்டிருப்பது அவசியம் அளவுக்கு அதிகமான அகநோக்கு, தேவைக்கு மிஞ்சிய புறநோக்கு - இரண்டுமே சமநிலைக்குப் புறம்பானவை ஆகவே, “சீர்தூக்கிப் பார்க்கப்படாத வாழ்க்கை, வாழத் தகுதியற்றது”

இளமைப் பருவத்தில் அகவளர்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் அளிக்க வேண்டும். இதுவே புறவளர்ச்சிக்கு அடித்தளமாக அமையும். தம்மை ஆராய்வதிலும், அறிந்து கொள்வதிலும்தான் அகவளர்ச்சி அடங்கியுள்ளது. இவ்வாறு, தம்மையே ஆய்ந்து அறிந்தவர்கள், தங்கள் புலன்கள், உணர்வுகள், மனம், சிந்தனை ஆகியவற்றின் வலிமையைத் தெரிந்துகொள்வார்கள். தங்கள் உடல் வளர்ச்சியின் செயல்பாடுகளைக் கண்டு அஞ்சவோ, ஒதுங்கவோ மாட்டார்கள். அகவளர்ச்சியுடையோர், தங்கள் உடல், உள்ளம், ஆன்ம தாகங்களையும், உணர்வுகளையும் செயல்களையும் அறிந்திருப்பார்கள். தங்கள் திறமைகளிலும் ஆற்றல்களிலும் நம்பிக்கை வைப்பார்கள். எத்தகைய சூழ்நிலைகளிலும் வாழத் தயாராக இருப்பார்கள். சவால்களையும் ஏற்றுக்கொள்வார்கள்.

### உள்ளத்தின் ஆளுமை வளர்ச்சி

அன்பு, பகைமை போன்ற அனைத்து உணர்வுகளின் ஊற்று உள்ளமே. சிந்தனைகளின் பிறப்பிடமும் அதுவே. குணநலன்களின் பட்டறை உள்ளம். அறிவின் பெட்டகம் உள்ளம். வாழ்க்கை மதிப்பீடுகளின் உறைவிடம் உள்ளம். மனிதனின் செயல்பாடுகள் அனைத்திற்கும் அடிப்படை உள்ளம். இத்துணை சிறப்புகள் வாய்ந்த உனது உள்ளத்தை உரிய முறையில் வளர்த்துக்கொள்ள:

- அனைவரிடமும் அன்புடன் பழகு
- எதையும் நன்கு சிந்தித்துச் சீர்தூக்கிச் செயல்படக் கற்றுக்கொள்.
- அமைதியின் கருவியாகச் செயல்படு

கோபம், போட்டி, பொறாமை, ஆணவம், தன்னலம், தற்பெருமை, தான்தோன்றித்தனம், பழிவாங்கும் எண்ணம், அலட்சியப்போக்கு, பேராசை போன்றவை உனது உள்ளத்தின் வளர்ச்சியைப் பாதிக்கும்.
“வெள்ளத் தனைய மலர் நீட்டம் மாந்தர் தம் உள்ளத் தனைய துயர்வு” (குறள் 595)

நல்ல எண்ணம் கொண்டவர்

- தாம் மதிப்புமிக்கவர் என்பதை உணர்வார்.
- தம் குறைகளைப் பிறர் சுட்டிக்காட்டும் போது, மகிழ்வுடன் ஏற்றுக் கொள்வார்.
- பிறரிடம் ஏற்றத் தாழ்வுகளைப் பார்க்கமாட்டார்.
- பிறரைப் பாராட்டுவார்.
- சொல்லில் உண்மையும், செயலில் நேர்மையும் கொண்டிருப்பார்.
- வாழ்க்கையில் சாதனைகள் படைப்பார்.

நல்ல எண்ணம் கொண்டவரிடம் தாழ்வு மனப்பான்மை, விரக்தி, சலிப்பு, பிறரை இழிவாகக் கருதுதல், குறை கூறுதல் போன்றவை காணப்படமாட்டா. தன்னம்பிக்கையுடனும், துணிவுடனும் தங்கள் ஆளுமைப் பண்புகளை வளர்த்துக் கொள்வர்கள். தாழ்வு மனப்பான்மைக்கு உட்படமாட்டார்கள். பின்வரும் திருவிவிலிய வசனங்களை எப்போதும் தங்கள் மனக்கண் முன் கொண்டு, இறை நம்பிக்கையுடன் தங்களது வாழ்வை வளப்படுத்திக் கொள்வார்கள்.

'ஆண்டவரே என் ஆயர்! எனக்கேதும் குறையில்லை... சாவின் இருள்சூழ் பள்ளத்தாக்கில் நான் நடக்க நேர்ந்தாலும் நீர் என்னோடு இருப்பதால் எத்தீங்கிற்கும் அஞ்சிடேன்' (திருப் 23:1-4) எனக்கு வலுவூட்டுகிறவரின் துணைகொண்டு எதையும் எதையும் செய்ய எனக்கு ஆற்றல் உண்டு. (பிலிப் 4:13) கடவுள் நம் சார்பில் இருக்கும்போது, நமக்கு எதிராக இருப்பவர் யார்? (உரோ8:31)

### வாழ்க்கைக்கு

எனது வாழ்க்கைக்கு மிகவும் இன்றியமையாதது, என்னையே நான் அறிவதே.ஒவ்வொரு மனிதருக்கும் ஆளுமை உண்டு. எனக்கும் ஆளுமை உண்டு. எனது வயதுக்கேற்ற ஆளுமையை வளர்த்துக்கொள்ள வேண்டியது எனது பொறுப்பு. இது காலத்தின் கட்டாயம். ஏனெனில், சிறந்த ஆளுமை வளர்ச்சியுடையது ஒருவரால்தான் இன்றைய உலகின் அறைகூவல்களைச் சந்தித்துச் சாதனை படைக்க முடியும். எனது ஆளுமை வளர்ச்சி பெற வேண்டுமென்றால், எனக்குள் முடங்கிக் கிடக்கும் என் திறமைகள், ஆற்றல்கள் முதலியவற்றை நான் வெளிப்படுத்த வேண்டும். என் வளர்ச்சியைப் பாதிக்கும் தடைகளை இனம் கண்டு அவற்றைக் களைந்தெறிய வேண்டும். என்னைப் பற்றிய தவறான எண்ணங்கள், நெறிப்படுத்தப்படாத உணர்வுகள், தாழ்வுமனப்பான்மை, தன்னம்பிக்கையற்ற நிலை, தனிமைப்படுத்திக் கொள்ளும் பழக்கம், குற்றப்பழி உணர்வு போன்றவை எனது ஆளுமை வளர்ச்சியைப் பாதிக்கும்.

- எனது உடலையும், அதன் வலிமையையும் தெரிந்து கொள்வேன்.
- எனது உள்ளத்து உணர்வுகளைப் புரிந்து கொள்வேன்.
- எனது ஆன்மாவின் நிலையை உணர்ந்து கொள்வேன்.
- நான் என்னையே ஏற்றுக்கொண்டு மனநிறைவுடன் வாழ்வேன்.

அருட்பணி. அ.அ. நவரெத்தினம்
சிரேஸ்ட விரிவுரையாளர்
கிழக்குப் பல்கலைக்கழகம்

மருதமடு அன்னையாக நம் நாட்டில் வீற்றிருக்கும் சமாதானத்தின் இராக்கினி மடுமாதாவாக மன்னார் மறைமாவட்டத்தில் உள்ள மடு திருத்தலத்தில் அமர்ந்து எத்தனை துன்பங்கள் தொடர்ந்து எவ்வளவு பிரச்சினைகள், பின்தொடர்ந்தாலும் அண்டிவரும் அனைவரையும் அரவணைத்து ஆறுதலும், தேறுதலும் அமைதியும் அருளும் அளித்து உனது வாழ்வு முடிந்து விடவில்லை. புதுவாழ்வு உனக்கு உண்டு என்று வாழ்வு கொடுக்கும் அன்னையாக உள்ளார் மடு அன்னை. இந்த அன்னையின் வரலாறோ



# மருதமடு அன்னையை வேண்டி

அலோசியஸ் நோயல் டானியல்
உவர்மலை



துன்பங்களில் தோன்றியதுதான். இன்றைக்கு 500 ஆண்டுகளுக்கு முன் அரசர்களின் காலத்தில் வேத கலாபனைகள் தொடர்ந்த வேளையில் மன்னாரில் 600 பேர்வரை வேதசாட்சிகளாக கொல்லப்பட்ட காலங்களில் கொடிய இன்னல்களுக்கு உள்ளாகி உயிர்களை இழந்து உடைமைகளை இழந்து அகதிகளாக அடைக்கலம் புக ஏதுமற்றவர்களாய் மக்கள் துன்பங்களை அனுபவித்த வேளையில் கத்தோலிக்க மக்கள் குழுமங்களாக சிற்சில இடங்களில் வாழ்ந்தனர். காலப்போக்கில் மன்னாரிலிருந்து 6 மைல் தொலைவிலுள்ள மாந்தை என்னும் கிராமத்தின் முக்கியமான ஆலயங்களுள் ஒன்றாகத் திகழ்ந்தது. இந்த மாந்தை ஆலயம் தான் செபமாலை மாதா என்று அந்நாட்களில் அறியப்பட்ட மடுமாதா சுரூபத்தின் ஆதி இருப்பிடம் அமைந்திருந்தது.

போர்த்துக்கேய ஆட்சியில் வளர்ந்து வந்த கிறிஸ்தவம் ஒல்லாந்தரின் ஆட்சி ஆரம்பித்ததும் (1658 – 1795) கொடிய வேதகலாபனைகளும் ஆரம்பித்தன. இந்த கலாபனைகளிலிருந்து தங்களை பாதுகாக்கும் பொருட்டும் செபமாலை அன்னையின் புதுமைமிகு சுரூபத்தைப் பாதுகாக்கும் பொருட்டும் குருக்களின் துணையில்லாத அந்த வேளையிலும் இருபது வரையிலான பக்தியுள்ள குடும்பங்கள் செபமாலை மாதாவின் சுரூபத்தை தூக்கிக்கொண்டு அடர்ந்த வன்னிக்காட்டில் அங்கும் இங்கும் திரிந்து அன்னையின் வழிநடத்தலில் எவ்வித தீங்குமின்றி அடர்ந்த காடுகளின் நடுவே மருத மரங்கள் சூழ உள்ள குளத்தின் அருகே வந்து சேர்ந்தனர். இதுவே அன்னை குடிகொள்ளத் திருவுளமான மருதமடு புனித பூமியாகும். அபயம் தேடி அலைந்த மக்களுக்கு வழிகாட்டியாகவும் கூடக்குடியிருந்து காக்கும் அன்னையுமானாள்.

மேலும் இத்தருணத்தில் யாழ்ப்பாணப் பட்டணத்தில் ஒல்லாந்தருடைய வேத கலாபனைகள் தொடர்ந்திருக்க 700 கிறிஸ்தவர்கள் மட்டில் பூநகரியைக் கடந்து பயத்தோடும் அங்கலாய்ப்போடும் அடைக்கலம் தேடி அலைந்த வேளையில் ஆச்சரியமான முறையில் வழிநடத்தப்பட்டு மருதமடுவிற்கு வந்து சேர்ந்த மாந்தைக் கிறிஸ்தவருடன் ஒன்று சேர்ந்து மடு அன்னையின் அடைக்கலத்தில் வாழ்ந்தார்கள். இந்த யாழ் கிறிஸ்தவ குழுவில் போர்த்துக்கேய தளபதியின் மகளாகிய எலேனா என்பவளும் இருந்தாள். அவரின் உதவியுடன் செபமாலை மாதாவின் சுரூபம் இருந்த இடத்தில் சிறு கோவில் கட்டினார்கள். அந்நாட்களிலிருந்தே மக்கள் செபமாலை செபித்து அன்னையின் அடைக்கலத்தில் வாழ்ந்து வந்தார்கள்.

இவ்வாறு அன்றிலிருந்து மடு அன்னை அகதிகளின் அடைக்கலத்தாயானாள். யாத்திரிகர்கள் மட்டுமல்ல நாட்டில் ஏற்படும் இயற்கை அனர்த்தங்கள், வன்செயல்கள் போன்ற அசாதாரண சூழ்நிலையின் போதெல்லாம் மக்கள் அன்னையின் அடைக்கலம் தேடி இன, மத, மொழி பேதமின்றி ஓடுதல் இயல்பாகும். அன்றைய காலகட்டம் போல் தற்போது இல்லை. மிகவும் இலகுவாக மடு அன்னையின் திருத்தலத்துக்கு மக்கள் இலகுவாக போய்வரும் சூழ்நிலை காணப்படுவதால் நாள் ஒரு பொழுதும் பொழுதொரு வண்ணமும் பல லட்சம் மக்கள் மருதமடு அன்னையின் தம்முடைய திவ்விய குமாரனோடு வீற்றிருக்கும் அன்னையை தரிசித்து ஆவணி 15 ஆம் திகதி விழா எடுப்பது வழக்கமான ஒன்றாக அமையப்பெற்றது. அன்னையைப் போல் நாமும் நிலை வாழ்வின் மணிமுடியைச் சூடுவோம். இறையருளை வேண்டி நிற்போம்.

# யார்? இவர்...



வீரமாமுனிவர் யார்? என்று கேட்டால் தேம்பாவணியை எழுதியவர் என்பர். இவரைப் பற்றிய அறிவைப் பெற்றிருப்பது எமது சமூகத்திற்கு நன்றி கூற வேண்டும். தமிழுக்கு அவர் ஆற்றிய சேவைகள் அவரது வாழ்க்கை முறை பற்றி அறிந்து கொள்வது கத்தோலிக்க கிறிஸ்தவ மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் ஏனையோருக்கும் தேவையான ஒன்றாகக் கருதுகின்றேன்.

வீரமாமுனிவர் இத்தாலி நாட்டில் மாந்துவா மாவட்டத்தில் காஸ்திக் கலியோன் என்னும் ஊரில் கி.பி 1680 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 8 ஆம் திகதி பிறந்தார். பெற்றோர் இவருக்கு வைத்த பெயர் கான்ஸ்டான் சியுஸ் ஜோசப் பெஸ்கி. இவர் தம் பாடசாலைக் கல்வியை நிறைவு செய்து 1698 ஆம் ஆண்டில் இயேசு சபையில் சேர்ந்தார். சமயக் கல்வியுடன் இத்தாலியம், இலத்தீன், கிரேக்கம், எபிரேயம் ஆகிய மொழிகளைக் கற்று தேர்ச்சி பெற்றார். 1707 ஆம் ஆண்டில் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார்.

இவர் சமயப்பணி ஆற்றுவதற்காக இந்தியாவில் தமிழ்நாட்டில் மதுரையை 1711 ஆம் ஆண்டில் வந்தடைந்தார். குருவாக திருநிலைப்படுத்தப்பட்ட பின் வீட்டை மறந்து, பெற்றோரை விட்டுப் பிரிந்து, உற்றார் உறவினரை விட்டு சமயப் போதனை செய்ய நாடு விட்டு நாடு சென்று வாழ்வது தான் அவர்களின் வாழ்க்கையாக மாறிவிடுகிறது.

தன் சொந்த ஊரைவிட்டு அதுவும் தெரியாத மொழிபேசும் தமிழ் நாட்டிற்கு வந்தார் எனின் அவரது துணிவை என்னவென்று சொல்வது. அங்கு வந்த அவர் காவி உடை தரித்து தமிழ் நாட்டு துறவி போல் வாழ்ந்து சமயப் போதனை செய்து வந்தார். பல மொழிகளிற் புலமையுடைய அடிகளாருக்கு தமிழ் மொழியைப் பயில்வது எளிதாகவே இருந்தது. அவர் தீபக்கவிராயர் என்பவரிடம் தமிழ் மொழியைக் கற்றார். தமிழ்ப் பேச்சு மொழி, இலக்கிய மொழி ஆகியவற்றை மிக அவதானத்துடன் கற்றார்.

இவர் தமிழ் நாட்டின் பல இடங்களிலும் சமயப்பணி ஆற்றியுள்ளார். அடிகளார் தமிழ் நாட்டில் ஏழாக் குறிஞ்சி வட்டாரத்தில் குருவாக பணியாற்றிய போது அவ் ஊரை ஆட்சி செய்த குறுநில மன்னராகிய மழவராயன் என்பவரோடு நட்புக் கொண்டு ஏழாக் குறிஞ்சியில் ஒரு ஆலயம் ஒன்றை நிறுவினார்.

மேலும் அடிகளார் கோனான் குப்பம் என்னும் சிற்றூரில் ஒரு ஆலயம் கட்டி அன்னை மரியாளின் திருவுருவைத் தமிழ் நாட்டுப் பெண் உருவில் அமைத்துப் "பெரிய நாயகி" எனப் போற்றினார். அவ் அன்னையின் அருளைப் பெற்று அவர் பாடிய நூலே "தேம்பாவணி" எனும் பெருங் காப்பியமாகும். இது 1726 ஆம் ஆண்டில் இயற்றப்பட்டது. தேம்பாவணி நூலை அடிகளார் இந்தியாவில் மதுரை நகரில் இருந்த புலவர்கள் முன்னிலையில் அரங்கேற்றம் செய்தார். புலவர்கள் அவரது நூலில் புலமை வீரமும், சமய வீரமும், உள்ளத் தூய்மையும் ஒருங்கே விளங்கக்கண்டு அவரை "வீரமாமுனிவர்" எனப் போற்றிப் புகழ்ந்தனர்.

**இவரது தமிழ்ப் பணிகள்**

இவர் இயற்றிய பெருங்காப்பியமான தேம்பாவணி, சிறு காப்பியங்களான திருக்காவலூர் கலம்பகம், அடைக்கலமாலை, கலிவெண்பா, அன்னையங்கல் அந்தாதி போன்றனவும். இலக்கண நூல்களான தொன்னூல் விளக்கம், கொடுந்தமிழ் இலக்கணம், செந்தமிழ் இலக்கணம் போன்றனவும், தமிழ் கற்கும் ஐரோப்பிய நாட்டவருக்காக அகராதிகளையும் இயற்றியுள்ளார். தமிழ் - இலத்தீன், தமிழ் - போர்த்துக்கேயம், தமிழ் - பிரஞ்சு அகராதிகளையும் ஆக்கியுள்ளார்.

செந்தமிழ் மொழியின் உயர்நிலை என போற்றப்படும் "திருக்குறள்" எனும் நூலில் அறத்துப்பால், பொருட்பால் ஆகிய இரண்டினையும் இலத்தீன் மொழியில் மொழி பெயர்த்துள்ளார். வீரமாமுனிவருக்கு முன் திருக்குறளை வேறு எவரேனும் எம் மொழியிலாவது மொழி பெயர்த்துள்ளனரா என்பது தெரியாது.

இவ்வாறு தமிழ் மொழியில் பெருங்காப்பியம், சிறுகாப்பியம், உரைநடை நூல்கள், தமிழ் இலக்கணநூல்கள், அகராதிகள், திருக்குறளை மொழி பெயர்த்து தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு உறுதுணையாகவும் இத்தாலி நாட்டில் பிறந்து வளர்ந்து தமிழ் நாட்டிற்கு வந்து தமிழ் மகனாக வாழ்ந்த வீரமாமுனிவரை நாமும் போற்றுவோம். 1746 ஆம் ஆண்டில் முனிவர் கேரள நாட்டிலுள்ள அம்பலங்காடு என்னும் ஊரில் இருந்த இயேசு சபை மடத்தின் தலைவராக நியமிக்கப்பட்டார் அங்கு அவர் 1747 ஆம் ஆண்டில் இறைவன் திருவடி அடைந்தார்.

ஜோ. நோமன் பல்தஸார்.

# புனித மரியாள் பேராலயம் ஓர் வரலாற்றுப் பார்வை



திருகோணமலையில் அன்றும், இன்றும், என்றும் கம்பீரமாக காட்சி தரும் புனித மரியாள் பேராலயம் 1893ஆம் ஆண்டில் திருகோணமலை மறைமாவட்டமாக பிரகடனப்படுத்தப்பட்டது. 130 வருடமாக நிலைகொண்டுள்ள புனித மரியாள் பேராலயம் 1782ஆம் ஆண்டில் சிறிய ஆலயமாக இருந்து வந்துள்ளது. 1783ஆம் ஆண்டிலிருந்து திருமுழுக்கு திருமண குறிப்புகள் காணப்படுகின்றன. 1795ஆம் ஆண்டில் பிரித்தானியர் திருகோணமலையைக் கைப்பற்றினர். 1802 இல் புதிய ஆலயமாக உருவாக்கப்பட்டிருக்கலாம். இதற்கு பிரித்தானியப் படையினரின் உதவி கிடைத்திருக்கலாம்.

ஆரம்ப காலத்தில் திருகோணமலை பிரதேசம் யாழ்ப்பாணம் மறைமாவட்டத்தின் ஒரு பகுதியாக இருந்தது. 1893ஆம் ஆண்டில் திருகோணமலை மறைமாவட்டமாக பிரகடனப்படுத்தப்பட்டு 1893 தொடக்கம் 1898 வரை காலி மறைமாவட்ட ஆயர் வான்றீத் ஆண்டகையால் நிர்வகிக்கப்பட்டது. 25.11.1898 இல் திருகோணமலை மறைமாவட்ட முதலாவது ஆயராக சாள்ஸ் லவீஞ் ஆண்டகை நியமிக்கப்பட்டார்.

மிக நீண்ட வரலாற்றைக் கொண்ட புனித மரியாள் தேவாலயத்தின் முதலாவது பங்குத் தந்தையாக அருட்பணி. ஹென்றி பூரி அவர்கள் கடமையாற்றினார். இவருடைய காலத்தில் இருந்தே இன்று வரை புனித மரியாள் தேவாலயம் காலத்திற்குக் காலம் அபிவிருத்தி செய்யப்பட்டு வந்துள்ளது.

அருட்பணி. போல் றொபின்சன் இன்றைய காலத்தில் ஆலயங்களின் அபிவிருத்தி சற்று வேகமாகவே நடைபெறுகின்றது. காரணம் இன்று உள்ள அனைத்துக் குருக்களும் செயற்திறன் மிக்கவர்களாக இருப்பதே. இவர்களை வழி நடத்தும் எமது மேன்மைமிக்க ஆயர் பேரருட்திரு. கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகையின் எழுச்சி மிக்க செயற்பாடுகள் மற்றுமொரு காரணம். 130வது திருநாளைக் கொண்டாடும் நாம் இன்றைய குருக்களுக்காகவும் ஆயருக்காகவும் அவர்களின் அளப்பரிய சேவைகளுக்காக விசேட விதமாக மன்றாடுவோம்.

**ஜோ. நோமன் பல்தஸார்.**

## 16, 20.08.2023 அன்று உவர்மலை குழந்தை இயேசு ஆலய இளைஞர் ஒன்றியத்தினரால் நடாத்தப்பட்ட “Car Wash” and “Bring and buy Sale”







## மறையாசிரியர்களின் கவனத்திற்கு

மறைக்கல்வி வாரம் சிறப்பிக்கப்பட்ட புகைப்படங்களையும், சிறுசெய்தியினையும் திருமலைத்தீபத்திற்கு 30.11.2023 ற்கு முன்னதாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

\- ஆசிரியர்



# படித்ததில் பிடித்தது



## கடப்பு அனுபவம்

அடர்ந்த காடு.
மூன்று மாணவர்கள் வழியைத் தவற விட்டனர்.
திசை தெரியாது அலைந்தனர்.

ஒருவர் மேல் ஒருவர் பழி சுமத்திக் கொண்டனர்
பொல்லாத வார்த்தைகளைத் தாராளமாய்ப் பரிமாற்றிக் கொண்டனர்.
மனத்தாங்கலோடு நடக்கலாயினர்.

தட்டுத் தடுமாறி…
ஒரு வழியாய் வழியைக் கண்டு பிடித்தனர்.

வழியில் ஓர் ஆறு. ஆற்றை கடந்தால் ஊரு.
எப்படிக் கடப்பது? விழித்து நின்றனர்.

கண்ணீரோடு கடவுளிடம் வரம் வேண்டினர்.
கண்ணீரைக் கண்ட கடவுள் தோன்றினார்:
'ஆளுக்கு ஒரு வரம் தரத் தயார்…!
கேளுங்கள். தரப்படும்.'

ஒருவன் கேட்டான்:
'கடவுளே..! ஆற்றைக் நீந்திக் கடக்கும் வலிமை தா..!'
வலிமை பெற்றான். ஆற்றை நீந்திக் கடந்தான்.

இன்னொருவன் கேட்டான்:
'கடவுளே.. ஆற்றைக் கடக்கும் சக்தியையும் யுக்தியையும் தா..!'
படகு தோன்றியது. துடுப்போடு ஆற்றைக் கடந்தான்.

மூன்றாமவன் அமைதியாய் நின்றான்.
'மகனே..! உனக்கு வரம் வேண்டாமா..!
கண்ணீருடன் கேட்டான்:
'கடவுளே..!
நான் அவர்களோடு வீணாகச் சண்டை போட்டுவிட்டேன்.
மனத்தாங்கல் கொண்டுள்ளேன்.
என் மனம் கனத்துப் போயிருக்கிறது.
எனக்கு மன்னிக்கும் மனம் தாராய்..!'
மகிழ்வோடு வரம் தந்தார் கடவுள்.

மன்னிக்கும் மனம் அவனுக்கு வந்தது.
கனத்த மனசு லேசானது.
தன் உடலே ஒரு மலர் போலானது.
ஆற்றை நடந்தே கடந்தான்.


ஆற்றைக் கடந்த மனிதனைப் பார்த்து
அனைத்தையும் கடந்த கடவுள் சொன்னார்:
'மன்னிக்கும் மனமிருந்தால்…
மலையையும் மடிக்கலாம்.'

## மன்னிப்பு.

**முனைவர் சேவியர் அந்தோனி சே.ச**
**தமிழ்நாடு**

# புனிதர்களின் பாதையில்....

## கார்லோ அகுஸ்திஸ்



10.10.2020 அன்று கருதினால் Agostino Vallini அவர்களால் மாலை 4 மணிக்கு புனித பிரான்சிஸ் அசிசியாரின் பேராலயத்தில் முத்திபேறு பெற்ற நிலைக்கு உயர்த்தப்பட்டார் கார்லோ அகுஸ்திஸ்.

இவர் 03.05.1991 ஆம் ஆண்டு பிறந்தார். பெற்றோர் இறை பக்தி குறைந்தவர்களாக வாழ்ந்தாலும், சிறு வயது தொடக்கம் கார்லோ தான் குருவாக வரவேண்டுமென்ற ஆசையுடன் வளர்ந்தார். மேலும் ஒவ்வொரு நாளும் திருப்பலியில் பங்கு பற்றவதும், ஆலயத்தில் செபமாலை தியானத்தில் பங்கு பற்றுவதும், தனது பாவங்களை குருவானவருக்கு அறிக்கையிட்டு இறை மன்னிப்பு பெறுவதும், ஆலயத்தில் மறைக்கல்வி கற்பிப்பதிலும், பாடசாலைக்கு சென்று படித்து நல்ல பெறுபேறுகளை பெற்று, கால்பந்தாட்டம் விளையாடுவதிலும் அதை பார்வையிடுவதிலும் அளப்பரிய ஆர்வம் காட்டினார்.

ஆலயத்திற்கோ திருப்பலிக்கோ செல்லாமல் வாழ்ந்து கொண்டிருந்த அவரது பெற்றோரை தனது இடைவிடாத செபத்தால் மனம் மாற்றி, குறிப்பிட்ட காலத்துக்கு பின், அவர்களும் தனது மகனோடு இணைந்து ஒவ்வொரு நாளும் திருப்பலிக்குச் சென்று தேவநற்கருணை பெற்று வாழத் தொடங்கினார்கள். கார்லோவிற்கு பின் குழந்தைகளே இல்லாமல் இருந்த பெற்றோர்களை பார்த்து கூடிய சீக்கிரம் இரட்டை குழந்தைகள் பெற்றுடுவீர் என்று சொன்னதும், 2010 ஆம் ஆண்டு தாய்க்கு 40 வயதும் தந்தை 43 வயதும் இருந்த போது இரட்டை குழந்தைகளை பெற்றெடுத்தும் அவ்வூரை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

இறை பக்தியில் மகிழ்வுடன் வளர்ந்த இளைஞன் கார்லோ அவர்கள் திடிரென்று இரத்த புற்றுநோயினால் பிடிக்கப்பட்டார். அவரது உடல் நிலைமை மோசமாகிக்கொண்டு போனாலும், அவர் தேவநற்கருணை மீது வைத்திருந்த பக்தியால், அவர் நோயினால் வாடிய அந்த குறுகிய காலத்தில் உலகிலுள்ள அனைத்து தேவநற்கருணை புதுமைகளின் வரலாறுகளை சேகரித்து, அதை மக்களின் பார்வைக்கு எடுத்துச் சென்றார். நோயினால் அவர் எவ்வளவு வேதனை பட்டாலும் அவர் அடைந்த அந்த வேதனை அனைத்தையும் தாய் திருஅவையின் வளர்ச்சிக்காகவும், திருத்தந்தையின் செப தேவைக்காகவும் மேலும் உலகிலுள்ள அனைத்து நோயாளிகளுக்காகவும் அவர் ஒவ்வொருநாளும் ஒப்புக்கொடுத்தார் என்று அவரது பெற்றோர் சாட்சி சொல்கிறார்கள்.

கார்லோ நோயினால் ஏற்பட்ட வேதனையில் கூட எந்நேரமும் சிரித்த முகத்துடன், இடைவிடாத செபத்துடனும், கடைசியாக நோயில் பூசுதல் என்னும் திருவருட்சாதனத்தை பெற்றுவிட்டு 12.10.2006 ஆம் ஆண்டு இறைவனிடத்தில் தனது ஆவியை ஒப்படைத்தார். இவர் தனது மரண வேளையையும், நேரத்தையும் முன்னறிவித்துள்ளார், அவர் முன்னறிவித்தது போன்றே சொன்ன நாளில் அவர் இறந்து போனது மிகவும் அதிசயமாக இருந்தது.

---

## சதா சகாய தாயின் பெருவிழா



திருகோணமலை மறைமாவட்டத்தின் கந்தளாவ பங்கில் அமைந்துள்ள சதா சகாய அன்னையின் ஆலயத்திருவிழா 2023.08.27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு திருவிழாத் திருப்பலி பங்குத்தந்தை அருட்பணி. ஜோர்ஜ் திசாநாயக்க அடிகளாரின் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட்டது.



உரோமையில் ஒரு சிறுமிக்கு தேவதாய் அளித்த செய்தியில் நாம் "சதா சகாயம் புரியும்" பரிசுத்த மரியா என வெளிப்படுத்தினார். அற்புதம் நிறைந்த தாயின் ஆலயம் திருகோணமலையில் இருந்து கண்டி வீதியில் கந்தளாய்குப் போகும் வழியில் 95 ஆம் மைல் கல் சந்தியில் இறங்கி வலது பக்கம் செல்லும் வீதி வழியாக 100 மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது இவ் ஆலயம்.

கந்தளாவ என்பது இந்த இடத்தின் பெயர். இவ் ஆலயம் அமைந்திருப்பது ஓர் அமைதியான சூழலில் ஆகும். மன அமைதிக்காக பிரார்த்தனையில் ஈடுபட ஓர் உன்னதமான இடம். விசாலமான பெரும் வளாகம், அடர்ந்த மரச்சோலையாக அமைந்திருப்பது மற்றுமோர் விசேட அம்சமாகும். காட்டு மரமான தேக்கு மரச்சோலை அத்துடன் மா, பலா போன்ற பெரும் பழமரங்களும் காணப்படும் ரம்மியமான இடத்தில் அமைந்துள்ளது. பார்க்காதோர் ஒரு முறை சென்று பார்த்தால் என்ன?

தேக்கு மரப் பலத்தினால் அருட்பணி. ஜோஜ் திசாநாயக்கா அடிகளார் பலம் பெற்று தன்னந்தனியே நின்று பணி புரிவதனால் தேவதாயாரின் அருள் நிறைந்த ஆசீர் கிடைப்பதாக.

கந்தளாவ பங்கு

---

## 50வது ஆண்டில்

பாலையூற்று புனித யோசப்வாஸ் கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தின் ஐம்பது வருட நிறைவு விழாவானது 10.09.2023, தேசிய இளையோர் தினமாகிய அன்று விமரிசையாக கொண்டாடப்பட்டது. இச்சிறப்புத் திருப்பலியினை திருகோணமலை மறைமாவட்ட கத்தோலிக்க இளைஞர் ஒன்றிய இயக்குனர் அருட்பணி X. I. ரஜீவா அடிகளார் மற்றும் பங்குத்தந்தையர்கள் இணைந்து ஒப்புக்கொடுத்தனர்.



அருட்பணி. எமர்சன் றாகல்

### புனித ஜோசெப் வாஸ் இளைஞர் ஒன்றியம் – சிறிய வரலாற்றுப் பார்வை

பாலையூற்று பங்கின் புனித யோசப்வாஸ் இளைஞர் ஒன்றியம் முதன் முதலாக அருட்பணி தியோபிளஸ் ராகல் அடிகளார் வழிகாட்டலில் 1973ம் ஆண்டு "இளைஞர் இயக்கம்" என்ற பெயரில் ஆரம்பமாகிப் பணியாற்ற தொடங்கியது. அருட்பணி ராகல் அடிகளார் ஆலய கட்டுமானப் பணியைத் தொடங்கிய காலத்தின் பின்னர் அமல மரித்தியாகிகள் சபை அருட்பணி இருதயம் அடிகளார் ஆலயத்தைக் கட்டி முடித்த வேளையிலும் பங்கு மக்களோடு இணைந்து அன்றைய இளைஞர் இயக்கத்தினர் அளித்த பங்களிப்பு போற்றத்தக்கது. ஆலயத் திருநாட்களில் சிற்றுண்டிச்சாலையை நடத்தும் பொறுப்பையும் இளைஞர் இயக்கம் ஏற்றுக்கொண்டது.

நாட்டின் சீரற்ற பாதுகாப்பு நிலைமை காரணமாக சிறிது காலம் இளைஞர்கள் ஒன்றுகூடுவது வெகுவாகப் பாதிக்கப்பட்டிருந்தது. இதனால் இளைஞர் இயக்கம் வீழ்ச்சி அடைந்தது. பின்னர் அமல மரித்தியாகிகள் சபை அருட்பணி மார்சலியார் அடிகளாரின் பணிக்காலத்தில் மீண்டும் இளைஞர் இயக்கம் எழுச்சிபெற்றது. இதன் பயனாக பாலையூற்றில் 1991. 03. 08 அன்று 16 அங்கத்தவர்களுடன் "கத்தோலிக்க இளைஞர் ஒன்றியம்" என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டது. தொடர்ந்து உப பங்கான அன்புவழிபுரத்திலும் இளைஞர் ஒன்றியம் ஆரம்பிக்கப்பட்டது. இவ்விரு இடங்களிலும் கத்தோலிக்க இளைஞர் ஒன்றியம் சிறப்பாக இயங்கி வந்தன. பாலையூற்று இளைஞர் ஒன்றியத்தின் ஏழாவது ஆண்டு நிறைவாக சிறுவர் பூங்காவை அமைத்ததுடன் பத்தாம் ஆண்டு நிறைவில் நெதர்லாந்து நாட்டு பிரமுகர்களின் நிதி உதவியுடன் ஒரு கோழிப்பண்ணையும் மூன்று கட்டங்களாக பூர்த்தி செய்யப்பட்டு வெகுவாகப் பயனடைந்தனர். 2001 ஆம் ஆண்டில் அமல மரித்தியாகிகள் சபை அருட்பணி ஜீவனதாஸ் பெர்னாண்டோ அவர்களின் பணிக்காலத்தில் தமது பத்தாவது ஆண்டு நிறைவையொட்டி சிறப்புத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, நினைவு மலர் ஒன்றும் வெளியிடப்பட்டது. அதன்பின் சிறிது காலம் மீண்டும் இளைஞர் ஒன்றியம் வீழ்ச்சி கண்டது. 2012 ஆம் ஆண்டு தொடக்கம் 2013 ஆம் ஆண்டு வரையில் கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தை மீண்டும் உருவாக்க அன்றைய பங்குத்தந்தையாக இருந்த அமல மரித்தியாகிகள் சபை அருட்பணி அந்திரயாஸ் பெர்ணான்டோ அடிகளார் பல முயற்சிகள் மேற்கொண்டார் அவரது முயற்சியின் பலனாக 7 அங்கத்தவர்களுடன் மீண்டும் கத்தோலிக்க இளைஞர் ஒன்றியம் உயிர்பெற்றெழுந்தது. அதன்பின்னர் புனித இயூஜீன் டி மெசனேட்டைப் பாதுகாவலராகக் கொண்டு செயல்படத் தொடங்கியது.

இவ்வாறு பல பங்குத் தந்தையரின் வழிகாட்டலில் பல தடைகளைத் தாண்டி பாலையூற்று கத்தோலிக்க இளைஞர் ஒன்றியம் தனது பணியை தொடர்ந்தது. 2013 ஆம் ஆண்டு பங்கை பொறுப்பேற்ற அருட்பணி மதுராங்கன் குரூஸ் அடிகளாரின் வழிநடத்துதலின் கீழ் பல புதிய இளைஞர்கள் உள்வாங்கப்பட்டு "புனித யோசப்வாஸ் கத்தோலிக்க இளைஞர் ஒன்றியம்" என்று புதிய பாதுகாவலரின் பரிந்துரை வழியாக, புதிய உத்வேகத்துடன் வீறுநடைபோடத் தொடங்கியது. 1973 ஆம் ஆண்டு இளைஞர் இயக்கமாக ஆரம்பித்து, பல தடைகளையும் தாண்டி, படிப்படியாக வளர்ந்து கத்தோலிக்க இளைஞர் ஒன்றியமாக உறுதிபெற்று, வானுயர வளர்ந்திருக்கின்றது.

இக் கத்தோலிக்க இளைஞர் ஒன்றியம் 2023ஆம் ஆண்டாகிய இவ்வருடத்தில் 50 ஆண்டு நிறைவையும் - பொன் விழாவையும், திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்டத்தில் உத்தியோகபூர்வமாக உள்வாங்கப்பட்டு கத்தோலிக்க இளைஞர் ஒன்றியமாக உருவாக்கப்பட்ட 32 ஆண்டு நிறைவையும் பெருமையோடு நினைவுகூருகின்றது.

# மாணவர் தேடல்...

## திருவிவிலியம் பற்றிய பொதுவான அறிமுகம்

திருமதி. ஜெயவதனி மரியதாஸ் (ISA)



கத்தோலிக்க திருவிவிலியத்தின் படி பழைய ஏற்பாட்டு நூல்களின் வகைகள்

1. ஐந்நூல்கள்
2. வரலாற்று நூல்கள்
3. ஞானநூல்கள்
4. இறைவாக்கினர் நூல்கள்
5. வெளிப்பாடு இலக்கியம்

1. ஐந்நூல்

தொடக்கநூல், விடுதலைப்பயணம், லேவியர், எண்ணிக்கை, இணைச்சட்டம்

ஐந்நூலின் வேறு பெயர்கள்
திருச்சட்ட நூல் - நீதிச்சட்டம், மோசேயின் சட்டம் தோரா (எபிரேய மொழியில்) இதன் பொருள் திருச்சட்டம் அல்லது படிப்பினை

- தொடக்கநூல் - உலகத்தினதும், மனிதனதும் ஆரம்பம் கூறப்பட்டுள்ளது. இறைவனே இவ்வுலகின் படைப்பாளி என்பதை எடுத்துரைப்பதே இதன் நோக்கமாகும்.
- விடுதலைப்பயணம் - இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட இஸ்ரயேலரை எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து மீட்டு வாக்களிக்கப்பட்ட நாட்டை நோக்கி அழைத்துச் சென்ற நிகழ்வு விபரிக்கப்பட்டுள்ளது.
- லேவியர் - இஸ்ரயேல் மக்கள் வழிபாட்டின் போது பின்பற்ற வேண்டிய சட்டங்கள் ஒழுங்குகள் பற்றிய விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.
- எண்ணிக்கை – கடவுளுக்கும் மக்களுக்கும் மோசே உண்மையுடன் பணியாற்றுவது இந்நூலின் சிறப்பாகும். பாலைவனப் பயணத்தின் போது மோசேயால் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பு பற்றிய விபரங்கள் அடங்கியுள்ளன.
- இணைச்சட்டம் - பாலைவனத்தினூடாக நீண்ட பயணம் செய்து வந்த இஸ்ரயேலருக்கு, கானான் நாட்டில் நுழைவதற்கு சற்றுமுன் மோசேயால் வழங்கப்பட்ட இறுதி அறிவுரைகளின் தொகுப்பு. ஆண்டவரது வார்த்தைக்கேற்ப வாழ்ந்தால் இறையாசீர் கிடைக்கும் என்பதே அதன் சாரம்சம்.

2. வரலாற்று நூல்கள்

இஸ்ரயேலரின் வாழ்வில் இடம்பெற்ற அனுபவங்கள், நிகழ்வுகளை நம்பிக்கையின் கண்ணோட்டத்தில் 16 வரலாற்று நூல்களும் விளக்கி நிற்கின்றது. இறைநம்பிக்கையை வளர்ப்பதே இதன் நோக்கமாகும். சீனாய் உடன்படிக்கையின்படி செயலாற்றும் போது தலைவர்களும், இஸ்ரயேல் இனத்தவரும் வாழ்வில் வெற்றியை, உயர்ச்சியை, மேன்மையை அனுபவித்ததையும், உடன்படிக்கையை மீறிய போது வீழ்ச்சியும், தோல்வியையும் பெற்றதைக் காணக்கிடைக்கிறது. உடன்படிக்கைப்படி வாழ்ந்தவர்களுக்கு இறையாசீரும், நிராகரித்தவர்களுக்கு இறை தண்டனையும் கிடைத்தது.

ரூத், எஸ்தர் நூல்களில் தனிநபர், தனி இனத்தின் பிரச்சனைகளும் அதற்குரிய தீர்வுகளும் இறைகண்ணோட்டத்துடன் முன்வைக்கப்பட்டுள்ளன. எஸ்ரா, நெகேமியா நூல்களில் இஸ்ரயேலர் பபிலோனியாவுக்கு நாடு கடத்தப்பட்ட பின், திரும்பவும் தம் சொந்த நாட்டிற்கு வந்து சமய, சமூக புனரமைப்புப் பணிகளில் ஈடுபட்டமை தொடர்பான விளக்கங்கள் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன.

3. ஞானநூல்கள்

பழைய ஏற்பாட்டில் ஞானம் என்பதற்குப் பயன்படுத்தப்படும் எபிரேயச் சொல் “ஹொக்மா” எபிரேய ஞானத்தின் பிரிவுகள்
குடும்ப மற்றும் கோத்திர ஞானம், அரச சபை ஞானம், ஆன்மீக ஞானம், அன்றாட வாழ்க்கைக்குரிய ஞானம்

ஞானம் பற்றிய போதனைகள் முன்வைக்கப்பட்டுள்ள இலக்கிய அமைப்புக்கள்
பழமொழிகள் - நீதிமொழிகள்
அறிவுரை - சீராக்கின் ஞானம்
கதைகள் - யோபு
கற்பனைகள் - சபை உரையாளர்
பாடல்கள் - இனிமைமிகுபாடல்

ஞான இலக்கியத்தின் பிரதான குறிக்கோள் அறிவு சார்ந்த முயற்சிகளை விட உண்மை, நேர்மையுடன் இறைவனுக்கு உகந்த முறையில் உத்தம வாழ்வு வாழ வேண்டுமென்பதை எடுத்துரைத்து நிற்கின்றது.

4. இறைவாக்கினர் நூல்கள்

இறைவனுக்காகப் பேசி, அவரது செய்தியை மக்களுக்கு அறிவித்த குழுவினர் எதையும் எதிர்பாராது இறைசெய்தியை அறிவித்தனர். இறைவாக்கினர் என்பதன் எபிரேயச் சொல் “நபி” அதன் பொருள் இறைசித்தத்தை மற்றவருக்கு அறிவிப்பவர் கிரேக்க மொழியில் “ப்றோபேரஸ்” என அழைக்கப்பட்டனர் அதன் பொருள், “ஒருவருக்காகப் பேசுபவர்”. இஸ்ரயேலரின் இறைவாக்கினர் இரு வகைப்படும். எழுத்துவடிவம் பெற்ற இறைவாக்கினர், எழுத்து வடிவம் பெறாத இறைவாக்கினர்.

5. திருவெளிப்பாட்டு இலக்கியம்

பழைய ஏற்பாட்டின் திருவெளிப்பாட்டு இலக்கிய நூல் - தானியேல் இந்த நூல் யூதர்கள் வேற்றினத்து மன்னனால், ஒடுக்கப்பட்டுத் துன்புறுத்தப்பட்ட போது எழுதப்பட்டது. இறைவன் தம் மக்களை முன்பு இருந்தவாறே ஆக்குவார் என்பது காட்சிகள். எடுத்துக்காட்டுக்கள் மூலம் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

தானியேல் கண்ட காட்சிகள் பாபிலோனிய பேரரசு தொடங்கி அடுத்து வரும் எல்லா பேரரசுகளின் எழுச்சியையும் வீழ்ச்சியையும் வேற்றின கொடுங்கோலனின் வீழ்ச்சியையும் இறைமக்களின் வெற்றியையும் முன்னுரைக்கின்றன. இந்நூலின் ஒரு பகுதி எபிரேய மொழியிலும் மறுபகுதி அரமேய மொழியிலும் எழுதப்பட்டுள்ளன.

கத்தோலிக்க திருவிவிலியத்தின் படி புதிய ஏற்பாட்டு நூல்களின் வகைகள்

1. வரலாற்று நூல்கள்
2. திருமுகங்கள்
3. வெளிப்பாட்டு இலக்கியம்

1. வரலாற்று நூல்கள்

நான்கு நற்செய்திகள், திருத்தூதர் பணிகள் நூல்

○ நற்செய்திகளின் அடையாளங்களும், அவை எழுதப்பட்ட காலங்களும்
மத்தேயு – மனித முகம், கி.பி 80 - 90 (பலஸ்தீனா)
மாற்கு – சிங்கம், கி.பி 65 - 70 (உரோமை நகர்)
லூக்கா – எருது, கி.பி 80 - 90 (சிரிய / அந்தியோக்கியா உரோம்)
யோவான் – கழுகு, கி.பி 90 - 100 (எபேசு)

○ நற்செய்திகளின் வேறு பெயர்கள்
மத்தேயு – திருஅவையின் நற்செய்தி, இறையாட்சியின் நற்செய்தி
மாற்கு – பாடுகளின் நற்செய்தி
லூக்கா – இரக்கத்தின் நற்செய்தி, தூய ஆவியின் நற்செய்தி, செபத்தின் நற்செய்தி, பெண்களின் நற்செய்தி
யோவான் – ஆன்மீக நற்செய்தி

○ நற்செய்தி எழுதப்பட்டதற்கான நோக்கங்கள்
மத்தேயு – யூத மக்களுக்கு இயேசுதான் உண்மையான மெசியா என்பதை எடுத்துக்காட்ட
மாற்கு – உரோமையின் துன்புறுத்தலுக்குள்ளான கிறிஸ்தவர்களைத் தைரியப்படுத்த
லூக்கா – இயேசு யூதர்களுக்கு மட்டுமல்ல உலகிற்கெல்லாம் மீட்பர் என எடுத்துக்காட்ட
யோவான் – இயேசுவே இறைமகனாகிய மெசியா என்ற நம்பிக்கையை ஏற்படுத்துவது.

2. திருமுகங்கள்

திருத்தூதர்களும், திருஅவையின் தலைவர்களும் காலத்தின் தேவைக்கேற்ப எழுந்த வினாக்களுக்கு விடையளிக்கவும், முரணான கருத்துக்களுக்குத் தெளிவை ஏற்படுத்தி, இறைநம்பிக்கையில் மக்களை உறுதிப்படுத்தவும் திருமுகங்களை எழுதினார்.

3. திருவெளிப்பாட்டு இலக்கியம்

புதிய ஏற்பாட்டின் வெளிப்படுத்தல் நூலாகும். இது தொமீசியன் பேரரசனாக இருந்த காலத்தில் கி.பி 77 – 90 வரையான காலப்பகுதியில் வேத கலாபனை காரணமாக எழுதப்பட்டது. திருவெளிப்பாட்டு நூல்கள் அடையாளங்களைப் பயன்படுத்தி எழுதப்பட்டன.

## புனித யோவான் நற்செய்தி
## 05 – 08 அதிகாரங்கள்

- எல்லோரும் பங்குபற்றலாம்
- போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது
- அதிர்ஸ்டசாலி குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர்.

பரிசுகள் முறையே 1ஆம் பரிசு 500/= 2ஆம் பரிசு 300/= 3ஆம் பரிசு 200/=

**கேள்வி பதில்**

1. பெத்சதா குளத்தின் சிறப்பு என்ன?

விடை:..........................................................................

2. 38 ஆண்டுகளாய் உடல்நலமற்றிருந்த ஒருவரைப் பார்த்து இயேசு கூறியது என்ன?

விடை:..........................................................................

3. யூதர்கள் இயேசுவைக் கொல்ல முயற்சி செய்ததன் காரணமாய் இருந்தது என்ன?

விடை:..........................................................................

4. இயேசுவிற்கு தீர்ப்பு வழங்கும் அதிகாரம் யாரால் வழங்கப்பட்டது?

விடை:..........................................................................

5. இயேசு தம் உடலையும் இரத்தத்தையும் குறித்து கூறியது என்ன?

விடை:..........................................................................

**சரி, பிழை எழுதுக.**

6. 5 மீன்களும் 2 வாற்கோதுமை அப்பங்களும் இருந்தன. ( )

7. ஒருவர் தண்ணீராலும் தூய ஆவியாலும் பிறந்தாலன்றி இறையாட்சிக்கு உட்பட இயலாது. ( )

8. யாரேனும் தாகமாய் இருந்தால் என்னிடம் வரட்டும் என்று இயேசு கூறினார். ( )

9. தந்தை தீர்ப்பு அளிக்கும் அதிகாரம் முழுவதையும் தன்னுடனே கொண்டிருந்தார். ( )

10. கடவுளைத் தம் சொந்த தந்தை என்று கூறித் தம்மையே கடவுளுக்கு இணையாக்கியதால் யூதர்கள் அவரைக் கொல்ல முயற்சி செய்தார்கள். ( )

**கோடிட்ட இடங்களை நிரப்புக.**

11. என்னை நலமாக்கியவரே ________________ படுக்கையை எடுத்துக் கொண்டு ________________ ________________ என்று என்னிடம் கூறினார்.

12. ________________ இருந்து இறங்கி வந்த ________________ தரும் ________________ நானே.

13. மெசியா வரும்போது இவர் ________________ மிகுதியான ________________ செய்யப் போகிறார்.

14. '________________ நானே' என்பதை நீங்கள் ________________ நீங்கள் பாவிகளாய்ச் சாவீர்கள்.

15. மேலிருந்து வருபவர், அனைவரையும் விட ________________ மண்ணுலகைச் சேர்ந்தவர் ________________ சார்ந்தவை பற்றியே அவர் பேசுகிறார்.

பெயர் :..........................................................................

முகவரி :..........................................................................

பங்கு :..........................................................................

முடிவுத்திகதி 30.11.2023

## ஹாய் குட்டீஸ்
## திருவிவிலிய புதிர் போட்டி – 56
## எசாயா 05 – 09 அதிகாரங்கள்

1. யூதா நாட்டின் அரசர்கள்?

விடை:..........................................................................

2. படைகளின் ஆண்டவரது சினத்தால் நாடு இதற்கு இரையானது மக்கள் இதற்கு விறகைப் போல் ஆனார்கள்?

விடை:..........................................................................

3. யார் உயர்ந்தோர் யார் தாழ்ந்தோர்?

விடை:..........................................................................

4. காட்டத்தி மரங்கள் வெட்டி வீழ்த்தப்பட்டன எனினும் அவற்றிற்குப் பதிலாக இவற்றை வைப்போம்?

விடை:..........................................................................

5. முற்காலத்தில் ஆண்டவர் எந்த நாட்டை அவமதிப்பிற்கு உட்படுத்தினார்?

விடை:..........................................................................

6. இஸ்ரயேலின் இரு குடும்பத்தாருக்கும் இடறு கல்லாகவும் தடுக்கி விழச் செய்யும் ஆகவும் இருப்பார்?

விடை:..........................................................................

7. இவர்கள் எனக்கு உண்மையான சாட்சிகளாயிருக்கட்டும் என்றார்?

விடை:..........................................................................

8. நாடெங்கும் நெருஞ்சி முள்ளும் முட்புதரும் நிறைந்திருப்பதால் இவற்றோடு இவர்கள் வருவார்கள்?

விடை:..........................................................................

9. காய்ந்த புல் தீக்கிரையாகித் தீய்ந்து போவது போல அவர்கள் ஆணிவேர் அழுகிப் போகும். அவர்கள் வழிமரபு இவ்வாறு போகும்?

விடை:..........................................................................

10. ஆண்டவர் கீழ்க்கையொலி எழுப்பி எங்கிருந்து வருபவற்றை அழைப்பார் எனக் கூறப்பட்டது?

விடை:..........................................................................

11. எருசலேமுக்கு எதிராக போர் தொடுத்து வீழ்த்த முயன்ற அரசர்கள் யார்?

விடை:..........................................................................

12. குரல் ஒலியால் வாயில் நிலைகளின் அடித்தளங்கள் அசைந்தன கோவில் முழுவதும் இதனால் நிறைந்தது?

விடை:..........................................................................

13. தூய்மையற்ற உதடுகளைக் கொண்ட மனிதன் நான்: தூய்மையற்ற உதடுகள் கொண்ட இவர்களின் நடுவில் வாழ்பவன் நான்?

விடை:..........................................................................

14. வீட்டோடு வீடு சேர்ப்பவர்களே வயலோடு இதனை இணைத்துக் கொள்பவர்களே உங்களுக்கு ஐயோ கேடு?

விடை:..........................................................................

15. இந்தக் கனி தருமென்று நான் காத்திருக்க காட்டுப் பழங்களை அது தந்ததென்ன?

விடை:..........................................................................

பெயர் :..........................................................................

முகவரி :..........................................................................

தரம் :..........................................................................

பங்கு :..........................................................................

முடிவுத்திகதி 30.11.2023

# சிறுவர்களுக்கான போட்டி

## படத்திலுள்ள 05 வித்தியாசங்களைக் கண்டுபிடித்தலும் நிறம் தீட்டலும்



படம் – 01



படம் – 02

- பாலர் முதல் தரம் 05 வரையுள்ள மறைக்கல்வி மாணவர்களுக்கு.
- திருமலைத்தீபத்தில் தரப்படும் படம் 01ற்கு மாத்திரம் நிறந்தீட்டி படம் 02 இல் வித்தியாசங்களைக் கண்டுபிடித்து படத்திலேயே குறிக்க வேண்டும்
- போட்டோ பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது
- 1, 2, 3ம் இடங்களைப் பெறுபவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும்

1ஆம் பரிசு - 500/-    2ஆம் பரிசு - 300/-    3ஆம் பரிசு - 200/-

பெயர் :.......................................................................

முகவரி :.......................................................................

தரம் :.......................................................................

பங்கு :.......................................................................

முடிவுத்திகதி 30.11.2023

## விடுபட்ட எழுத்துப் புதிர் போட்டி – 44
## நீதி மொழிகள் ( 10 – 12 ) வரை

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| வி | | | | | | | மெ | | ■ |
| | ■ | ந | பொ | | ■ | | | | |
| | | | | | ■ | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | உ |
| | | | | | | | | | |
| | | | ■ | | | | | | |
| | | | ■ | எ | அ | கை | | | |
| | | | | | | | | ந | |
| | அ | | | | | | | | ஊ |

1. வி ... மு ... ற் ... சி
2. வி ... க ... ள் ள ... ர் ... ள்
3. ஊ ... ய ... தை
4. மெ ... ... ழ் ... க் கா ...
5. ந ல் ... ர் ... கு ... ர ...
6. அ ... னி ... ர்
7. அ ... சி ... ட ப் ... ர்
8. ந ... மை ப ய ... ... ம்
9. கை ... ... று ... று ... ர்
10. உ ... த் ...
11. எ ... ய ... ழ் க் ...
12. ஊ ... றி ... ற் ... ம்
13. பொ ... ந ... ன்

பெயர் :.......................................................................

முகவரி :.......................................................................

பங்கு :.......................................................................

முடிவுத்திகதி 30.11.2023

## சிறுவர்களுக்கான நிறம் தீட்டுதல் போட்டி முடிவுகள்

1ஆம் பரிசு 500/= ரூபா
R. வியோனா
சகாயபுரம்
மூதூர்.
புனித சதாசகாய அன்னை ஆலயம்

2ஆம் பரிசு 300/= ரூபா
S. ஜிதுஷ்கர்
இல. 93/3 நீதிமன்ற வீதி
திருகோணமலை
புனித மரியாள் பேராலயம்

3ஆம் பரிசு 200/= ரூபா
ஜோசப் ஜெப நாயகம் அருஷன்
இல.10/1, அன்புவழிபுரம்
புனித சதாசகாய அன்னை ஆலயம்

## ஹாய் குட்டீஸ்
## திருவிவிலிய புதிர் போட்டி ~ 54
## சபை உரையாளர் 1~ 12 அதிகாரங்கள்

1ஆம் பரிசு 500/= ரூபா
சு. சுவேக்கா
இல. 216/12, சுடரொளி வீதி
பாலையூற்று
புனித லூர்து அன்னை திருத்தலம்

2ஆம் பரிசு 300/= ரூபா
சி. றொபின்ஷன்
இல. 89, அந்தோனியார் வீதி
நித்தியபுரி, செல்வநாயகபுரம்
புனித வனத்து அந்தோனியார் ஆலயம்

3ஆம் பரிசு 200/= ரூபா
டிஷாதர்
இல. 93/3, நீதிமன்ற வீதி
திருகோணமலை
புனித மரியாள் பேராலயம்

## புனித லூக்கா நற்செய்தி
## அதிகாரங்கள் 21 – 24

1ஆம் பரிசு 500/= ரூபா
க. சுகந்தினி
சந்தை வீதி, மூதூர் – 07
புனித அந்தோனியார் ஆலயம்

2ஆம் பரிசு 300/= ரூபா
வேர்ஜினியா வெல்ட்
இல. 12, பாரதிபுரம்,
புனித சதாசகாய அன்னை ஆலயம்

3ஆம் பரிசு 200/= ரூபா
ஞா. மெலோசியா
இலுப்பைகுளம்
சாம்பல்தீவு
திருமுழுக்கு யோவான் ஆலயம்

# மறைக்கல்வி நடுநிலைய நிகழ்வுகள்




இவ்வருடம் மறையாசிரியர் தேர்வு 1,2,3 பரீட்சை எழுதவிருந்த மறையாசிரியர்களுக்கான பாடமீட்டற்கருத்தமர்வானது 19.08.2023 அன்று அருட்பணி. A. உதயகுமார் அடிகளாரின் வழிநடத்தலின் கீழ் மறைக்கல்வி நிலையத்தில் நடைபெற்றது.




சகாயபுரம், இருதயபுரம், மூதூர் ஞாயிறு மறைப்பாடசாலை மாணவர்களுக்கான (15 வயதிற்கு மேற்பட்ட மாணவர்கள்) இளவயது திருமணம் தொடர்பான விழிப்புணர்வு கருத்தமர்வானது 19.08.2023 அன்று மூதூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் திரு. A.R நிரோஷன் (LLB (Hons) Attorney at Law) அவர்களின் வழிகாட்டலில் நடைபெற்றது.






ஞாயிறு மறைப்பாடசாலை மாணவர்களுக்கான தேசியமட்ட திருவிவிலிய அறிவுப்போட்டி மற்றும் கட்டுரைப்போட்டி 30.08.2023 அன்று மறைக்கல்வி நிலையத்தில் நடைபெற்றது. இதில் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று பிரிவுகளிலும் மாணவர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.




தமிழ் மற்றும் சிங்கள மறையாசிரியர்களுக்கான மறையாசிரியர் தேர்வு 1,2,3 ற்கான பரீட்சை 29.09.2023 அன்று மறைக்கல்வி நியைத்தில் நடைபெற்றது.